வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.09.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 272 | பக்கங்கள் : 12

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும்!

## ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்து



கொழும்பு, செப்ரெம்பர் 08

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ருக் வலியுறுத்தியுள்ளார். 11

## முல்லைத்தீவில் கைக்குண்டு வெடிப்பு!

### இருவர் காயம்

முல்லைத்தீவு, செப். 08

முல்லைத்தீவு - மாங்குளம் - நீதிபுரம் பகுதியில் கைக்குண்டு ஒன்று வெடித்துள்ளது.

சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் 7 வயதுச் சிறுவன் ஒருவனும் அடங்குவதாக குறிப்பிடப் 11

## தற்கொலை செய்யும் அளவுக்கு முஸ்லிம்கள் முட்டாள்களல்லர்!

### சபையில் கூறினார் சரத் வீரசேகர

கொழும்பு, செப். 08

சிங்களத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு தற்கொலை செய்யும் அளவுக்கு முஸ்லிம்கள் முட்டாள்கள் அல்லர் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி தொடர்பாக பாராளுமன்றில் பல்வேறு கருத்துக்கள் 11



## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி; துப்பாக்கி ரவை உட்பட பொருட்கள் மீட்பு

முல்லைத்தீவு, செப். 08

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வானது இரண்டாவது நாளாக இன்றைய தினம் காலை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட சில பொருள்கள் மீட்கப்பட்டன.

குறித்த மனித புதைகுழி அகழ்வுப் பணி முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி த. பிரதீபன், தொல்பொருள் 11

## சர்வதேச விசாரணையை பொன்சேகாவும் கோருகிறார்

கொழும்பு, செப். 08

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சனல் 4 குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமாகும். பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள் எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச விசாரணை நடத்த அரசு ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களில் சுரேஷ் சாலி ஈடுபட்டுள்ளார் என்று நான் நம்புகிறேன். அவர் ராஜபக்ஷக்களின் கழிவறைகளை கழுவியவர். 2019 ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதல்களிலும் ஈடுபட்டிருப்பார். அவர் அந்த நேரம் நாட்டில் இல்லையென்கிறார். அவர்கள் அந்த 11

## புலம்பெயர்ந்த தமிழர்களின் நட்பு அலைவரிசையே சனல் 4

### அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

கொழும்பு, செப். 08

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தவும் அரசாங்கம் தயாராக உள்ளது என நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ருக்கு முன்பாக இலங்கைக்கு எதிராக 11

## இலங்கை - இந்தியப் பயணிகள் கப்பல்சேவைக்கு அனுமதியில்லை

### இந்திய ஊடகங்கள் தகவல்

சென்னை, செப். 08

இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு, மத்திய நீர்வழி போக்குவரத்து அமைச்சு அனுமதி மறுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழகம் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு விரைவில் கப்பல் 11

சிறுமியின் கை துண்டிக்கப்பட்ட விவகாரம்

## யாழ்.போதனா வைத்தியசாலை தாதி வெளிநாடு செல்லத் தடை!

யாழ்ப்பாணம், செப். 08

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 7 வயதுச் சிறுமியின் கையின் ஒரு பகுதி சத்திர சிகிச்சை மூலம் துண்டிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்த சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையில் கடமையில் இருந்த தாதியொருவருக்கு 11

## சனல் 4 இற்கு எதிர்ப்பு!




கொழும்பு, செப். 08

ஈஸ்டர் தின பயங்கரவாத தாக்குதலின் பின்னணியை அம்பலப்படுத்திய சனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக கொழும்பில் நேற்று குழு ஒன்று போராட்டத்தில் ஈடுபட்டது.

அதிகார வெறிக்காக நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் இராணுவப் புலனாய்வுத்துறையின் கூறுகள் செயற்பட்டதாக சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படத்தில் 11

## நாணய நிதியத்தின் குழு கொழும்புக்கு வருகின்றது

கொழும்பு, செப். 08

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று எதிர்வரும் நாட்களில் இலங்கை வரவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு இரண்டாம் கட்ட நிதியை வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காகவே அந்த குழு நாட்டை வந்தடையவுள்ளதாக அவர் கூறினார். (அ)

## இறக்குமதிக் கட்டுப்பாடுகள் டிசெம்பருக்குள் நீக்கப்படும்

கொழும்பு, செப். 08

தனியார் மோட்டார் வாகனங்களை தவிர்ந்த ஏனைய அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் எதிர்வரும் டிசெம்பருக்குள் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டுமுதல் இலங்கையில் 11

## இப்படியும் நடக்கிறது

இலங்கையில் யார் ஆட்சியில் இருக்கவேண்டும் என்பதை இந்த நாட்டு மக்கள் தீர்மானிக்கின்ற காலம் போய், வெளியார் தீர்மானிப்பது பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கின்றது.

இரண்டாயிரத்து பதினைந்தில் மைத்திரியை பொதுவேட்பாளராக்கி மகிந்தவை தோற்கடித்த போதும், மகிந்தர் தனது தோல்விக்கு பின்னல் இந்திய உளவு அமைப்பான 'றோ' இருப்பதாக பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

பின்னர், அவர்கள் கொண்டுவந்த மைத்திரி மீண்டும் மகிந்தவை பிரதமராக்கி எல்லாவற்றையும் போட்டு உடைத்த பின்னர் மக்கள் தமது தலைவரை தெரிவுசெய்தனர்.

அதாவது வெளியாரின் தெரிவு தோல்வியில் முடிந்ததால், அதனையடுத்து நடந்த தேர்தலில் கோட்டா, மக்களின் பேராதரவுடன் ஆட்சிக்கு வந்தார்.

அந்தத் தேர்தலில் வெளியாரால் எதுவும் செய்ய முடியாமல் போனாலும், மிகக்குறுகிய காலத்திலேயே அவர் ஆட்சியிலிருந்து ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டதன் பின்னணியிலும் வெளிச்சக்திகள் இருக்கின்றன என்றே கூறப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே அடுத்து நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலும் முக்கிய கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் இனி இல்லை என்றும் ஒவ்வொருவரையும் தனித்தனியாக களம் இறக்குவதற்கான வேலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்துவருவதாகவும் இந்தப் பத்தியில் சில நாட்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில்தான் களம் இறங்கப்போவதாகவும் அதில் எதுவித மாற்றமும் இல்லை என்றும் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து இப்படியொரு முடிவுக்கு வரவேண்டியதாகியிருந்தது.

ஏற்கனவே தான் தனது கட்சியின் வேட்பாளராக தெரிவாகியிருக்கிறார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜே. வி. பியின் தலைவருமான அநுரகுமார திஸநாயக்காவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வேண்டி போராடிவரும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் தமது சார்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான சாலிய பீரிசை களம் இறக்க முயன்று வருவதாகவும் தெற்கில் பரவலாக கூறப்பட்டுவந்தது.

இந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக பலமான பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடவில்லை என்றும் அதன் பின்னணியில் ரணில் இருப்பதாகவும் கூறப்பட்டுவந்தது.

ஆனால், ரணிலுக்கு எதிராக பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்கவேண்டியதன் அவசியத்தை 'பலமான' பக்கத்து நாடு ஒன்று ஒவ்வொரு கட்சியினரிடமும் தனித்தனியாக பேசிவருவதாக இப்போது நம்பகமாக தெரிய வந்திருக்கின்றது.

இதுவரை தமது தெரிவாக யாரை போட்டியிடவைக்க வேண்டும் என்பது குறித்து எதுவித கருத்தும் சொல்லாமலே பொதுவேட்பாளரின் அவசியத்தை மட்டுமே அந்த நாடு வலியுறுத்தி வருகின்றதாம்.

அதற்காக சஜித் தரப்புடன் தனியாகவும் அவர்களின் அணியில் உள்ள சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களுடன் மட்டுமன்றி தனித்தனியாக சில பிரபலங்களுடனும் பேசப்பட்டிருக்கின்றது என்பதை சில தலைவர்களே உறுதிப்படுத்தினர். சம்பிக்க ரணவக்க, டலஸ் அழகப்பெரும ஆகியோருடன் மட்டுமன்றி, செல்வாக்குள்ள சில தனி நபர்களுடனும் பேசப்பட்டிருக்கிறதாம்.

இதேவேளை, பொதுஜன பெரமுனவுக்குள் ஏற்பட்டிருக்கும் மோதல், அங்கு மிகப்பெரிய பிளவை ஏற்படுத்தலாம் என்று நம்பப்படுகின்றது. ஓர் அணியினர் பிரிந்து தனியாக இயங்கவிருப்பதும் அந்த அணி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக செயல்படவிருப்பதும் நாம் அறிந்ததுதான். அவ்வாறு கட்சியைப் பிரித்து கட்சிக்கு நெருக்கடியைக் கொடுக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி தேர்தலில் ஒத்துழைப்பு கொடுக்கக்கூடாது என்பதில் பஸில் தலைமையிலான ஒரு அணி தீவிரமாக இருப்பதால் கட்சி மூன்று அணிகளாக பிரிவடையும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அவ்வாறு பஸில் தனி அணியாக பிரியும் இடத்து அவரையும் இந்த பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வைக்க அந்த நாடு முயன்றதாகவும், ஆனால் அதனை சஜித் தரப்பு அடியோடு மறுத்துவிட்டதாகவும் இந்த பேச்சுக்களை அறிந்த முக்கிய தரப்பு ஒன்று தகவல் தந்தது.

- ஊர்க்குருவி.

# அடுத்த வாரம் கியூபாவுக்கு விஜயம் செய்கிறார் ரணில்

கொழும்பு, செப். 08

கியூபாவின் ஹவானாவில் நடைபெறும் ஜி 77 உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக அடுத்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொது சபையின் வருடாந்த அமர்வுகளுக்காக நியூயோர்க் செல்வதற்கு முன்னர் ஜனாதிபதி 15 ஆம்,16 ஆம் திகதிகளில் இந்த விஜயத்தை மேற்கொள்வர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியூபா ஜனாதிபதி மிகயெல் டயஸ்-கனெலின் உத்தியோகபூர்வ அழைப்பையடுத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க "ஜி 77 மற்றும் சீனா" அரச தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இந்த உச்சி மாநாட்டுடன் இணைந்ததாக இலங்கை மற்றும் கியூபா இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதிக்கும் கியூபா ஜனாதிபதிக்கும் இடையில் இரு தரப்பு பேச்சும் நடைபெறவுள்ளது.

"ஜி77 மற்றும் சீனா" நாடுகளின் தலைவர்கள் உச்சிமாநாடானது ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுக்கு அமைய வளர்ந்து வரும் 134 நாடுகளை உள்ளடக்கிய மிகப்பெரிய அரசுகளுக்கிடையேயான குழுவாக கருதப்படுகிறது.

மேலும் இது தென் பிராந்திய நாடுகளுக்கு அவற்றின் கூட்டுப் பொருளாதார நலன்களை வெளிப்படுத்தவும், அவர்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்தவும் மற்றும் கூட்டு பேச்சுகளை நடத்துவதற்கான திறனை மேம்படுத்தவும் வாய்ப்பை வழங்குகிறது.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் உள்ள சமகால சவால்களை மதிப்பிடுவதற்கும், அதிக பலன்களை அடைவதற்கான கூட்டுத் தீர்வுகளை ஆராயவும், குறிப்பாக தென் பிராந்திய நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பின் மூலம், வளர்ந்து வரும் நாடுகள் எவ்வாறு இணைந்து செயல்பட முடியும் என்பதை ஆராயவும் இந்த மாநாட்டின் ஊடாக மேலும் வாய்ப்பு ஏற்படும்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (அ)

# காற்றாலை மின்சார உற்பத்தி திட்டத்துக்கு ஆதரவாக மன்னாரில் நேற்று போராட்டம்!



மன்னார், செப். 08

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு ஆதரவாக நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2 ஆம் கட்ட பணிக்கு தொடர்ச்சியாக மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வரும் நிலையில், நேற்று இத்திட்டத்திற்கு ஆதரவாக மன்னாரில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள நடுக்குடா கிராமத்தைச் சேர்ந்தவர்களினாலேயே இந்தப் போராட்டம், மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சுமார் 40 பேர் வரை கலந்து கொண்டு, பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நடுக்குடா, காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2 ஆம் கட்ட பணியை தாமதம் இன்றி முன்னெடுக்க வேண்டும் என்றும் அதனால் வேலை இல்லாத பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் இதில் கலந்து கொண்டிருந்தோரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பொது அமைப்புக்கள் தமது இலாப நோக்கத்துக்காகவே இத்திட்டத்திற்கு எதிர்ப்பை முன்னெடுத்து வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இந்தப் போராட்டத்திற்கு மக்களை ஏமாற்றியே, ஏற்பாட்டாளர்கள் அழைத்து வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட வேலையற்றோர் சங்கம் என்ற ஓர் அமைப்பினாலேயே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த பெண் ஒருவர், குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டால் தங்களுக்கு காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தில் வேலை பெற்று தருவதாக கூறிய காரணத்தாலேயே இதில் பங்கேற்றதாக தெரிவித்தார். (அ)

# ஹொங்கொங்கிற்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவை விரைவில்!

கொழும்பு, செப். 08

ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட கெதீ பெஸிஃபிக் நிறுவனம் அடுத்த வருடம் பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் கொழும்புக்கான விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

நான்கு வருட இடைவெளிக்குப் பிறகு, ஏ - 330 விமானத்துடன் கொழும்புக்கான தமது சேவையை ஆரம்பிக்கும் அந்த நிறுவனம் வாராந்தம் மூன்று விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளது.

ஹொங்கொங்கிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால விமானப் பங்காளித்துவத்தின் மறுமலர்ச்சியை இந்த மீள் தொடக்கம் குறிப்பதாக கெதீ பெஸிபிக் தெரிவித்துள்ளது. (அ)

Eelanadu
08.09.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 13ஐ வரவேற்கும் ஆணையாளர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை வெளியாகியிருக்கின்றது. இலங்கையின் பொறுப்புக்கூறலிலுள்ள போதாமைகள் தொடர்பில் ஆணையாளர் வழமைபோல் சுட்டிக்காட்டியிருக்கின்றார். பொறுப்புகூறலில் பற்றாக்குறை என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கை பெரிய பொருளாதார நெருக்கடியொன்றிலிருந்து மீண்டு வருவதை சுட்டிக்காட்டியிருக்கும் ஆணையாளர் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாடுகள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கின்றார் - அத்துடன், சமகாலத்தில் பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கை முன்னேற்றங்களை காண்பிக்க வேண்டுமென்றும் குறித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

ஆணையாளரின் அறிக்கையில் – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக்கால நகர்வுகள் – குறிப்பாக தமிழ் கட்சிகளுடனான பேச்சுகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளுடனான உரையாடல்களை ஆணையாளர் வரவேற்றிருக்கின்றார். முக்கியமாக, அரசியல் தீர்வு விடயத்தில் தற்போது ஜனாதிபதி முன்வைத்திருக்கும் 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தை ஆணையாளர் அலுவலகம் வரவேற்றிருக்கின்றது. அதேவேளை, நியாயமான நல்லிணக்க முயற்சியில் பொறுப்புக்கூறல் முக்கியமானது என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வு விடயம் வரவேற்கப்பட்டிருப்பதை தமிழ் கட்சிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அனைத்தையும் கறுப்பு வெள்ளையாக நோக்கும் மனோபாவத்தை விடுத்து, விடயங்களை ஆழமாக நோக்குவதற்கும் அதனடிப்படையில் சிந்திப்பதற்கும் செயல்படுவதற்கும் தமிழ் தரப்புகள் முன்வர வேண்டும். 13ஆவது திருத்தச்சட்டத்தை வலியுறுத்தும் தமிழ் கட்சிகளின் அணுகுமுறையை, அண்மையில் அமெரிக்க தூதுவரும் வரவேற்றிருந்தார். தற்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரது அறிக்கையிலும் அது வரவேற்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம், அரசியல் தீர்வு விடயத்தில் 13ஆவது திருத்தச்சட்டம் தவிர்க்க முடியாத விடயமாக மாறியிருக்கின்றது. இந்தியாவினால் மட்டும் வலியுறுத்தப்பட்ட விடயம் சர்வதேச அரங்கிலும் ஒலிக்கின்றது.

அதேவேளை, அறிக்கையில் ஒரு விடயம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது, அனைத்து சமூகங்களின் ஒத்துழைப்புடன் கூடிய தீர்வே நீடித்து நிலைப்பதாக இருக்கும். அவ்வாறாயின் அரசியல் தீர்வு விடயத்தில், வெளித்தரப்பின் அழுத்தம் இருக்கப்போவதில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான், ஏற்கனவே, அரசமைப்பில் இருக்கின்ற, 13ஆவது திருத்தச்சட்டம் அனைவரதும் கவனத்தை பெறுகின்றது. அதனை ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு முன்னேறுவது தொடர்பில் நோக்கப்படுகின்றது. இதனை மறுப்பது, எதிர்ப்பதானது – மறுபுறம் அரசாங்கத்துக்கே முற்றிலும் சாதகமான ஒன்றாக அமையும். பாதிக்கப்பட்டவர்களின் உரிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லையென்று கூறிக்கொண்டு, அரசாங்கம் அமைதியாக இருக்க முடியும். பந்தை தமிழர் பக்கத்தில் வீசிவிட்டு, கொழும்பு அதன் நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துக்கொண்டு செல்லும். விடயங்கள் அனைத்தும் பொருளாதார மீட்சியோடு மட்டும் முடங்கிவிடும். எனவே, தமிழ் தேசியர்கள் என்போர், தங்களின் வழமையான சிந்தனைப் போக்கிலிருந்து வெளியில் வருவதே இன்றைய சூழலுக்குத் தேவை. தமிழர்களின் நகர்வுகள், அரசாங்கத்தை ஒரு பொறிக்குள் தள்ளுவதாக இருக்க வேண்டும் – மாறாக, அரசாங்கம் தமிழர்களை ஒரு பொறிக்குள் சிறைப்படுத்துவதாக இருக்கக்கூடாது.

# பாடசாலை நுழைவாயிலை மூடி பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டம்



*கிளிநொச்சி, செப். 08*

*கிளிநொச்சி பூநகரி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் ஆரம்ப கல்வி பிரிவுக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று பகல் பாடசாலையை மூடி கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பூநகரி கல்விக்கோட்டத்தின் கீழ் உள்ள மிகவும் பழமை வாய்ந்த பாடசாலையான வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விப் பிரிவுக்கான போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகவும், பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி நேற்று காலை 07 மணிமுதல் பாடசாலையின் நுழைவாயிலை மூடி பெற்றோர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*ஆரம்பப் பிரிவில் 79 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில் மூன்று ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் மேலும் இரண்டு ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாகவும் வெற்றிடத்திற்கு ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிக்குமாறும் கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளுக்கு நீண்ட காலமாக ஆசிரியர்கள் இல்லாதனால் கற்பித்தல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படாது பாதிக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர்.*

*போராட்டத்தையடுத்து கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் மற்றும் கோட்டக்கல்வி அதிகாரி,*

*ஜெயபுரம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகளை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முயற்சித்தபோதும் ஆசிரியரை நியமிக்கும் வரை தாங்கள் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்தனர்.*

*இதேநேரம் பாடசாலைகளுக்கான ஆரம்ப பிரிவுக்கு ஆசிரியர் ஒருவர் நேற்று நியமிக்கப்பட்டதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.*

*(அ)*

## 8 வயது சிறுமியின் கை அகற்றல்

# யாழ். போதனா வைத்தியசாலை முன் நேற்று காலை சிலர் கூடிப் போராட்டம்!



*யாழ்ப்பாணம், செப். 08*


யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ கவனமின்மையால் சிறுமியின் கை அகற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, போதனா வைத்தியசாலையின் எதிரில் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பழைய வெளிநோயாளர் பிரிவு வாயிலுக்கு அருகில் ஒன்றுகூடியவர்கள், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி கோரி கோசங்களை எழுப்பினர். பின்னர், வைத்தியசாலை வீதியை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட முயன்றனர்.

எனினும், பொலிஸார் வீதியை மறிக்க வேண்டாமென அறிவுறுத்தியதையடுத்து, வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களுக்கு இடையூறு இல்லாமல், வைத்தியசாலைக்கு எதிரில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு அனுப்பப் போவதாக குறிப்பிட்டு, பொதுமக்களின் கையெழுத்தும் பெற்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 08 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 22
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி




**மேடம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கணுக்கால் வலிக்கும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மிதுனம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். கவனம் தேவை. வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். வெல்லும் நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**சிம்மம்**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். விலகி சென்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப்பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவர்கள். சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**மகரம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்த சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தைரியம் கூடும்.

# தி. மு. கவுடன் கைகோக்க தயார்! பா. ஜ. க. தமிழக தலைவர் அறிவிப்பு

சென்னை, செப். 08

ஊழல், சாதி, மதுபான ஒழிப்பு உள்ளிட்டவற்றை ஒழிக்க தி. மு. கவுடன் கைகோக்க தயார் என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை ‘என் மக்கள் என் மண் பயணம்’ மேற்கொண்டு வருகிறார். இரண்டாம் கட்ட யாத்திரை நடைபயணத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“இந்தியா ஒன்பது ஆண்டுகளில் மாறி உள்ளது. நாடு மிகப் பெரிய வளர்ச்சி நாடாக மாறி உள்ளது. தி. மு. க. ஆட்சியில் மது விற்பனை, அரிவாள் கலாச்சாரம், கனிமவள கொள்ளை அதிக அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சர் குடும்பத்திற்காக மட்டுமே ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. முதலும் முடிவும் இல்லாதது சனாதன தர்மம்.

வாழ்வில் அனைத்து விசயங்களுடனும் ஒன்றியுள்ளது சனாதன தர்மம். திமுகவினருக்கு கோயில் உண்டியல் மீது மட்டும் கண் உள்ளது. உதயநிதி ஸ்டாலின் ஒரு குழப்பவாதி. அவர் என்ன பேசவென்று தெரியாமல் உள்ளார். மதுபான கடையை ஒழிப்போம், வறுமையை ஒழிப்போம் என்றால் நாங்களும் திமுகவோடு கைகோர்க தயார். ஆனால் சனாதனக் கொள்கை ஒழிக்கநினைத்தால் சேரமாட்டோம்.”- என்றார்.

(ஐ)

# அரசியல்வாதிகள் மக்களை மிரட்டுவதை நீதிமன்றம் வேடிக்கை பார்க்காது!

## சென்னை உயர்நீதிமன்று எச்சரிக்கை

சென்னை, செப். 08

“அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தின் மூலம் பொதுமக்களை மிரட்டுவதையும், அவர்களுக்கு பிரச்னை ஏற்படுத்துவதையும் இந்த நீதிமன்றம் வேடிக்கைப் பார்க்காது” என்று சென்னை உயர்நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

சென்னை தி.நகரில் உள்ள அப்துல் அஜீஸ் தெருவில் கிரிஜா என்ற மூதாட்டிக்குச் சொந்தமான வீடு உள்ளது. இந்த வீட்டில் தி. மு. க. வட்டச் செயலாளர் ராமலிங்கம் என்பவர் வாடகைக்கு வசித்து வந்தார். இவர் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் வீட்டுக்கான வாடகை தராமல் இருந்து வந்துள்ளார். இதைத் தொடர்ந்து தனது வீட்டில் குடியிருப்பதற்கான வாடகையை வழங்க ராமலிங்கத்துக்கு உத்தரவிடக் கோரி கிரிஜா வழக்குத் தொடர்ந்திருந்தார். அரசியல்வாதியிடமிருந்து வாடகையை பெற்றுத் தர வேண்டும் என்று கோரி நீதிமன்றை தனது விண்ணப்பத்தில் கேட்டார்.

இதையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி, “அரசியல்வாதிகளின் வார்த்தைகளும் செயல்களும் தொண்டர்கள் மற்றும் மக்கள் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, அவர்கள் பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய வகையில் செயல்பட வேண்டும். அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தின் மூலம் பொதுமக்களை மிரட்டுவதையும், அவர்களுக்கு பிரச்னை ஏற்படுத்துவதையும் இந்த நீதிமன்றம் வேடிக்கை பார்க்காது.

அரசியல்வாதிகளை பொறுத்தவரை, தங்களது அதிகாரத்தை மக்கள் நலனுக்காக பயன்படுத்த வேண்டுமே தவிர, சுயநலத்துக்காக பிரச்னைகளை உருவாக்கக் கூடாது. நில அபகரிப்பு என்பது தற்போது பகல் கொள்ளையாக மாறிவிட்டது. வாடகை பாக்கியை வசூலிப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர், மூத்த குடிமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று உத்தரவிட்டார். அத்துடன், வழக்கையும் ஒத்தி வைத்தார்.

(ஐ)

# மக்களை திசை திருப்பவே சனாதனம் குறித்து பேச்சு!

## உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு



சென்னை, செப். 08

தி. மு. கவின் மீது மக்களுக்குள்ள வெறுப்பை, அதிருப்தியை திசை திருப்பும் வகையில், சனாதனம் குறித்து உதயநிதி பேசுகிறார். இல்லாத ஒன்றை ஒழித்துக் கட்டுவதாக பேசுவது கடும் கண்டனத்துக்குரியது - என்று முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

‘விடியலை நோக்கி’ என்று மேடைக்கு மேடை தேர்தல் பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த தி. மு. க., இன்று தமிழ்நாட்டு மக்களை ‘விரக்தியை நோக்கி’ அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. சொத்து வரி, மின் கட்டணம், அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வு என பலமுனைத் தாக்குதல்களுக்கு பொதுமக்கள் ஆளாகி உள்ளனர்.

தி. மு. கவின் மீது மக்களுக்குள்ள வெறுப்பை, அதிருப்தியை திசை திருப்பும் வகையில், சனாதனம் குறித்து உதயநிதி பேசுகிறார். இல்லாத ஒன்றை ஒழித்துக் கட்டுவதாக பேசுவது கடும் கண்டனத்துக்குரியது. இந்திய அரசமைப்புச் சட்டப்படி அரசாங்கங்கள் நடைபெற்று, அதற்குரிய பலனை மக்கள் பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், சனாதனம் குறித்து பேசுவது தேவையற்றது. சமதர்மம் குறித்து பேசும் திமுக, முதலில் தி. மு. கவில் சமதர்மம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

தி. மு. க. மீதுள்ள அதிருப்தியை திசைதிருப்ப தி. மு. க. முயன்றாலும் அது மக்கள் மத்தியில் நிச்சயம் எடுபடாது. இனிவரும் தேர்தலில் தி. மு. க. மண்ணைக் கவ்வுவது நிச்சயம். தி. மு. க. ஆட்சி அகற்றப்படும் - என்றுள்ளது.

(ஐ)

# 13ஐ நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக உள்ளார் ஜனாதிபதி!

## கூறுகிறார் பாலித ரங்கே பண்டார

கொழும்பு, செப். 08

**"பொலிஸ் அதிகாரம்தவிர அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார்." - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்திய பிரதமருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தினார். 13 ஐ அமுல்படுத்தும் விடயத்தில் அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றார். 13 ஆவது



திருத்தச்சட்டம் எமது அரசமைப்பில் உள்ள அங்கம், அதில் உள்ள பொலிஸார் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை உள்ளது. அதைதவிர ஏனைய விடயங்களை அமுல்படுத்த ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

இந்தியப் பிரதமரிடமும் இது கூறப்பட்டது. கொழும்பில் 13 இல்லை எனக்கூறிவிட்டு இந்தியா சென்று 13 பிளஸ் என கூறும் நபர் எமது ஜனாதிபதி கிடையாது. அவர் முடியுமான விடயங்களை செய்கின்றார். மக்கள் பக்கம் நின்று முடிவுகளை எடுக்கின்றார்.

வடக்கு அபிவிருத்தி தொடர்பிலும் அவரிடம் விசேட திட்டம் உள்ளது.-என்றார். (அ)

# வீடுகள் எரிக்கப்பட்ட எம்.பிக்களுக்கு மதுபானசாலை அனுமதிப் பத்திரம்?

கொழும்பு, செப். 08

கடந்த ஆண்டு பொதுமக்களால் தாக்கப்பட்டு வீடுகள் எரிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அமைதிப்படுத்த மதுபானச்சாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி கூறுகையில்-

இந்த எம்.பி.க்களின் வீடுகள் எரிக்கப்பட்டதையடுத்து, அவர்களுக்கு எதுவும் செய்யப்படவில்லை. எனவே அவர்களை அமைதிப்படுத்தவே அவர்களுக்கு மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

எனினும், இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார இதனை நிராகரித்துள்ளார்.

"தீவைப்பு தாக்குதலுக்கு உள்ளான எம்.பி.க்களால் உருவாக்கப்பட்ட சங்கத்தின் தலைவராக நான் இருக்கிறேன். தாக்குதலுக்கு ஆளான எந்தவொரு எம்.பி.க்கும் உரிமம் வழங்கப்படவில்லை என்பதை நான் தெளிவாக கூறுகிறேன்," என்று அவர் கூறினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட தம்மை சபையில் பேசவிடாமல் தடுக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி முறையிட்டார்.

"சபையில் பேசவிடாமல் சபாநாயகர் எங்களை ஒரு பக்கத்திலிருந்து தடுக்கிறார். அதே நேரத்தில் எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் என்னைத் தடுக்கிறார்கள். எனவே, இந்த சூழ்நிலையில் வீட்டில் இருப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை," என்று அவர் கூறினார். (அ)

# வடமராட்சியில் இடம்பெற்ற உள்ளூர் உற்பத்திச் சந்தை!



வடமராட்சி, செப். 08

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமான பருத்தித்துறையும், கரவெட்டி பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்தி பொருட்களின் விற்பனைச் சந்தையும் உணவு திருவிழாவும் இன்றைய வியாழன்தினம் காலை 8:30 மணியிலிருந்து நெல்லியடி மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வடமராட்ச் வடக்கு பருத்தித்துறை பிரதேசம் மற்றும் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற கைவினைப் பொருட்கள், தைத்த ஆடைகள், மற்றும் உள்ளூர் இயற்கை உணவுப் பொருட்கள், உட்பட விவசாய திணைக்களத்தினரால் நாற்றுக்கள் விற்பனையும் இடம்பெற்றன.

இதில் வடமராட்சிக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், என பலரும் சென்று பொருட்களை கொள்வனவு செய்தமை அவதானிக்க முடிந்தது. (அ-02)

# பாதுகாப்பு செயலர் எழுதிய 02 நூல்கள், பாடல் வெளியீடு

கொழும்பு, செப். 08

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்னவினால் எழுதப்பட்ட 'தாராகே ஆகமனய' மற்றும் "கடொல் எத்து" (மொழிபெயர்ப்பு நூல்) மற்றும் "எஹே கந்துலெலி" பாடல் வெளியீட்டு விழா நேற்று முன் தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு ஆனந்த வித்தியாலய குலரத்ன மண்டபத்தில் நடைபெற்றது.

இரண்டு நாவல்களின் முதல் பிரதிகளை ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அதன் பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோருக்கு பிரதிகள் கையளிக்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன எழுதிய "எஹே கந்துலெலி" பாடலுக்கு யசஸ் மெதகெதரவினால் இசையமைக்கப்பட்டு ஏ்ளதோடு பிரபல பாடகி அபிஷேகா விமலவீர பாடல்களைப் பாடியுள்ளார்.



இந்நிகழ்வில் பேராசிரியர் பிரனீத் அபேசுந்தர விசேட உரை ஆற்றினார்.

ஆனந்த கல்லூரி நூலகத்திற்கு வழங்கப்பட்ட புத்தகங்களின் தொகுதி அக்கல்லூரியின் அதிபர் லால் திஸாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

மகாசங்கத்தினர் தலைமையிலான மதத் தலைவர்கள், அமைச்சர்களான அலி சப்ரி, டிரான் அலஸ், சுசில் பிரேமஜயந்த மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள், கல்வியியலாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# பத்து பொலிஸார் வைத்தியசாலையில்

கொழும்பு, செப். 08

உணவு விஷமானதால் பயாகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் பத்து உத்தியோகத்தர்கள் சுகயீனமடைந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோய்வாய்ப்பட்டவர்களில் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் இலஞ்ச ஒழிப்புப் பிரிவின் இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களும், பொலிஸாரும் உள்ளடங்குவதாகவும் கூறப்படுகிறது.

தற்போது நாகொட வைத்தியசாலையின் இரண்டு பொலிஸ் பரிசோதகர்கள், ஒரு பொலிஸ் பெண் மற்றும் ஒரு கான்ஸ்டபிள் ஆகியோர் சிகிச்சை பெற்று வருவதாகவும், ஏனையவர்கள் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# கொழும்பு துறைமுகத்தில் 3,300 லீற்றர் டீசல் திருட்டு!

கொழும்பு, செப். 08

கொழும்பு துறைமுக சுற்றுவட்டாரப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பௌசர் ஒன்றிலிருந்து 3 ஆயிரத்து 300 லீற்றர் டீசல் திருடப்பட்டமை தொடர்பில் துறைமுக அதிகார சபையின் பொறியியலாளர் உட்பட நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு திருடப்பட்ட டீசலின் பெறுமதி 10 இலட்சத்து 9 ஆயிரத்து 800 ரூபா என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் துறைமுக அதிகார சபையின் பாதுகாப்பு அதிகாரியொருவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் துறைமுக அதிகார சபையின் பொறியியலாளரொருவர், வாகன தரகர் மற்றும் சாரதிகள் இருவர் என நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி கூறினார்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் பெலிஹுஒல்லுய, மினுவாங்கொட மற்றும் ஹெய்யந்துடுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# திரிபோஷா தொழிற்சாலையை தனியார் மயமாக்க வேண்டாம்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, செப். 08

திரிபோஷா வழங்குவதில் பாரிய குறைபாடு காணப்படுவதாகவும், சிறு பிள்ளைகள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கூட முறையான திரிபோஷா வழங்கப்படுவதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரிபோஷ தொழிற்சாலையையும் தனியார் மயமாக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக அறியக்கிடைப்பதாகவும், இவ்வாறு தனியார்மயமாக்காது திரிபோஷவை உரிய



முறையில் வழங்குவது எந்தவொரு அரசாங்கத்தின் தேசியப் பொறுப்பு என்பதனால் அதனை முறையாக வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# சுற்றுலா அபிவிருத்தி என்ற போர்வையில் மதுபான உரிமங்கள் விற்கும் அரசாங்கம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 08

**இலங்கையில் கடந்த காலங்களில் பெருமளவிலான மதுபானக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதுடன், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்கிறோம் என்ற போர்வையில் தற்போதைய அரசாங்கம் மதுபான உரிம பத்திரங்களை தனது நண்பர்களுக்கு விற்பனை செய்வதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும், சில பகுதிகளில் புதிதாக மதுபானக் கடைகள் அமைக்கப்பட்டதால், அப்பகுதி மக்கள் ஆத்திரமடைந்தனர் என்றும், விகாரைகள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகாமையில் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதால் சிறார்களும் மதுவுக்கு பலியாகும் அபாயம் எழுந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

மக்கள் மது அருந்தும் பழக்கத்திற்கு அதிகமாக ஆளாகுவது, நல்லொழுக்கமுள்ள சமுதாயத்திற்கு தடையாக உள்ளதாகவும், இவ்வாறான நிலை உருவாகாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும், இல்லாவிட்டால் பொதுமக்களுக்கு இடையூறுகள் கூட ஏற்படலாம் எனவும்,தனது அரசியல் நண்பர்களுக்கு பியர் உரிமம் அல்லது மதுபான அனுமதிப் பத்திரம் வழங்குவதால் பல பகுதிகளில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

நேற்று பாராளுமன்றத்தில் 27 (2) இன் கீழ் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுற்றுலாத் தொழில் செயல்படாத பிரதேசங்களிலும் இந்த பியர் உரிம பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், எதிர்காலத் தேர்தலுக்காகப் பணம்



தேடுவதற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உரிமப்பத்திரம் என்பதை இது காட்டுவதாகவும், இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி தொகை கணக்கெடுப்பை நடத்தவுள்ளதாகவும், அரசாங்கத்தினால் உத்தியோக பூர்வமாக இது குறித்த தகவல் அறிவிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டில் போலியான பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டி மதுபானம் விற்பனை செய்யும் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும், சுமார் 100 மதுபானக் கடைகளில் இருந்து சுமார் 100,000 மதுபானங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், தற்போது ராஜகிரியில் உள்ள கலால் திணைக்கள கட்டடத்தில் போத்தல்களைப் பதுக்கி வைத்து,போலி ஸ்ரிக்கர்களுக்கு பதிலாக உண்மையான ஸ்ரிக்கர்களை ஒட்டி பிரச்னைகளை மறைக்க பெரும் சதி நடந்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு வெளிப்படுத்தினார்.

இவ்வாறு,பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை தவறாக அச்சிடுவது கூட்டுச் சதி என்றும்,இதற்கு குற்றவியல் சட்டத்தின் மூலம் தண்டனை வழங்க வேண்டும் என்றும்,இது ஒரு ஆபத்தான பிரச்னை என்றும் இதனை சாதாரணமாக தீர்த்து வைத்திட முடியாது என்றும்,இந்த மோசடிகளை மூடிமறைப்பதற்கு நிறுவனங்களின் பிரதானிகள் உட்பட சில அரச அதிகாரிகள் செயற்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# உயர்தர பெறுபேறு மீளாய்வுக்கு ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, செப். 08

2022 கல்வி பொது தராதர உயர் தர பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நேற்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒன்லைனில் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக **https://onlineexams.gov.lk/eic** எனும் இணையத் தளத்திற்குள் பிரவேசிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது. (அ)

# கணவன் தாக்குதல் மனைவி உயிரிழப்பு!

கொழும்பு, செப். 08

கம்பளை வெலம்பொட பிரதேசத்தில் கணவன் - மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறின் போது கடுமையாக தாக்கப்பட்ட 24 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார் என வெலம்படை பொலிஸார் தெரிவித்தனர்.

உடுநுவர வெலம்பொட லொகுஅங்க பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய அமலி லக்மினி சேனாநாயக்க என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மனைவி நீண்ட நேரமாக கையடக்கத் தொலைபேசியில் பேசியதை அறிந்த கணவன், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் சமையல் அறையில் இருந்த தடி ஒன்றினால் மனைவியை தாக்கியுள்ளார்.

இதன்போது பலத்த காயமடைந்த மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# 5 மாவட்டங்களில் மண் சரிவு அபாயம்

கொழும்பு, செப். 08

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையினால் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்வெசும கொடுப்பனவின் இரண்டாம் கட்டம் இன்று முதல்!



கொழும்பு, செப். 08

2 இலட்சத்து 57 ஆயிரத்து 170 அஸ்வெசும பயனாளிகளுக்காக கொடுப்பனவு வழங்கும் நிகழ்வின் ஜூலை மாதத்திற்கான இரண்டாம் கட்ட பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்ரு அஸ்வெசும பயனாளிகளுக்கான பணம் வங்கிகளில் வைப்பு செய்யப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்படி, ஆயிரத்து 550 மில்லியன் ரூபாய் இரண்டாம் கட்டமாக வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

(அ)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த ஒருவர் பொலிஸ் நிலையத்தில் ஊசி விழுங்கினார்!

கொழும்பு, செப். 08

15 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பொத்துப்பிட்டிய பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் இரண்டு ஊசிகளை விழுங்கிய நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என பொத்துப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தனது சட்டபூர்வமற்ற மனைவியின் மகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், நேற்று முன் தினம் இரு தரப்பினரும் பொலிஸாருக்கு அழைக்கப்பட்டு முறைப்பாடு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

விசாரணையின் பின்னர், சந்தேகநபர் தடுத்து வைக்கப்பட்டதாகவும், அவர் பதற்றமடைந்து இரண்டு ஊசிகளை விழுங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பாரதியாரின் கொள்ளுப் பேரனுக்கு ஆசிரிய கலாசாலையில் வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 08

பாரதியாரின் கொள்ளுப் பேரனின் யாழ்ப்பாண வருகைக்கான வரவேற்பு வைபவம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு நேற்று அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது

பாரதியாரின் கொள்ளுப்பேரனும் பொறியியலாளரும் பிரபல கர்நாடக இசைப் பாடகருமாகிய டாக்டர் ராஜ்குமார் பாரதி தனது குறுகிய கால யாழ்ப்பாண விஜயத்தின்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டார். அவருடன் கொழும்பின் பிரபல நடன ஆசிரியர் திவ்யா சுஜேனும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

நிகழ்வை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் முன்னிலைப்படுத்தினார். அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் கு.பாலசண்முகன் ஆற்றினார்.

கலாசாலையின் சமூகத்தினர் ராஜ்குமார் பாரதிக்கான கௌரவத்தையும் யாழ்ப்பாண வருகையை அடையாளப்படுத்தும் நினைவுச் சின்னத்தையும் வழங்கி கௌரவித்தனர்.





ராஜ்குமார் பாரதி - தனது உரையின்போது பாரதியார் பாடல்களை தனது இனிய குரலில் பாடியும் இளம் தலைமுறையினரிடையே பாரதியாரின் கருத்துக்களை கொண்டு சேர்ப்பதற்கான உத்திகள் பற்றி விளக்கியும் உரையாற்றினார்.

(அ)

# ‘நான் அப்போது நீதிமன்றமும் பொலிஸுமாக அலைந்து கொண்டிருந்தேன் எனக்கெங்கே நேரம்?’

## சனல் 4 தகவல் பற்றி கோட்டாபய விளக்கம்!

2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் அதிர்ச்சியூட்டும் பின்னணி பற்றி சனல் 4 தொலைக்காட்சியின் வெளிப்படுத்தல்களை தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தன்னிலை விளக்கம் அளித்துள்ளார்.

அவர் நேற்று ஒரு அறிக்கையாக இதனை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,

21 ஏப்ரல் 2019 அன்று ஈஸ்டர் ஞாயிறு அன்று இஸ்லாமிய தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்கள், 2019 நவம்பரில் நான் ஆட்சிக்கு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காக திட்டமிட்டு வசதி செய்யப்பட்டதாக சனல் 4 ஒளிபரப்பிய இலங்கை பற்றிய சமீபத்திய திரைப்படத்தில் கூறப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு.

இந்த குற்றச்சாட்டு ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த ஹன்சீர் ஆசாத் மௌலானாவின் கூற்றுகளை சார்ந்துள்ளது. அவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை (இவர் இராணுவ புலனாய்வு இயக்குநராக கடந்த காலத்தில் மிகவும் பிரபலமானவர்) தற்கொலை குண்டுதாரியான சஹ்ரானுக்கும் அவரது சகோதரர் ஜைனி மௌலவிக்கும் பெப்ரவரி 2018 இல் அறிமுகப்படுத்தினார். மேஜர் ஜெனரல் சாலே எனது விசுவாசிகளில் ஒருவராக விவரிக்கப்படுகிறார். எவ்வாறாயினும், அவர் பல ஜனாதிபதிகளின் கீழ் பணியாற்றிய ஒரு தொழில் இராணுவ அதிகாரி மற்றும் அனைத்து இராணுவ அதிகாரிகளும் அரசுக்கு விசுவாசமானவர்கள், தனிப்பட்ட நபர்களுக்கு அல்ல.

நானும் முன்னாள் ராணுவ அதிகாரி, அவரைப் போலவே நானும் பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பணியாற்றியுள்ளேன். 2015ஆம் ஆண்டு பாதுகாப்புச் செயலர் பதவியை விட்டு விலகி நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் வரை, மேஜர் ஜெனரல் சாலேயுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

மேஜர் ஜெனரல் சாலே, தாம் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாகவும், 2016 முதல் 2018 டிசம்பர் வரை மலேசியாவில் ஆலோசகராகப் பணியாற்றியதாகவும் சனல் 4 இற்கு அறிவித்திருந்தார். இந்த சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படும் போது அவர் இலங்கையில் இருக்கவில்லை.

மேலும், 2019 ஜனவரி முதல் நவம்பர் வரை அவர் தேசிய பாதுகாப்புக் கல்லூரி பாடநெறியைப் பின்பற்றி இந்தியாவில் இருந்தார். மேலும் 2016 முதல் 2019 வரையிலான இந்த முழு காலத்திலும் அவர் இலங்கையின் பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு கட்டமைப்பிற்குள் செயல்படவில்லை.

2016 இல் இராணுவ புலனாய்வுப் பிரிவில் இருந்து மேஜர் ஜெனரல் சாலே நீக்கப்பட்ட பின்னர், அவர் மீண்டும் அந்த அமைப்பில் பணியாற்றவில்லை. நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகுதான், அவர் 2019 டிசெம்பரில் இருந்து மீண்டும் அரச புலனாய்வு சேவையின் தலைவராக உளவுத்துறையில் இணைந்தார். எனவே மேஜர் ஜெனரல் சாலே 2018 பெப்ப்ரவரியில் தற்கொலை குண்டுதாரிகளை சந்தித்தது பற்றிய இந்தக் கதை ஒரு கட்டுக்கதை என்பது தெளிவாகிறது.

தற்கொலை குண்டுதாரிகளுடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தொடர்பு கொண்டிருந்தனர் என்ற அவர்களின் கூற்றுக்கு வலு சேர்க்கும் வகையில், 2018 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி வவுணதீவு சம்பவத்தில் இரு பொலிஸார் கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்கள்



திருடப்பட்ட சம்பவம் மற்றும் வனத்தவில்லு பாதுகாப்பு இல்லத்தில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த போது, இராணுவ புலனாய்வுப் பிரிவினர் பொலிஸ் விசாரணைகளை நாசப்படுத்தியுள்ளனர் என திரைப்படம் குற்றஞ்சாட்டியுள்ளது.

2015-2019 அரசாங்கம் புலனாய்வுப் பிரிவினரையும் குறிப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினரையும் துன்புறுத்தியதையும், அந்தக் காலப்பகுதியில் அதன் உறுப்பினர்கள் சில மாதங்கள் மற்றும் வருடங்கள் விளக்கமறியலில் மற்றும் பொலிஸ் காவலில் இருந்ததையும் அனைத்து இலங்கையர்களும் அறிவார்கள். எனவே 2015 - 2019 அரசாங்கத்தின் போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸ் பணியை நாசப்படுத்தலாம் என்ற எந்தவொரு கூற்றும் வெற்று முட்டாள்தனமானது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, 2015-2019 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் முஸ்லிம் தீவிரவாதக் கட்டமைப்பின் அறிகுறிகள் புறக்கணிக்கப்பட்டதாக மிகத் தெளிவாகக் கூறியுள்ளது.

18 நவம்பர் 2016 அன்று 32 இலங்கையர்கள் சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதக் குழுவில் இணைந்துள்ளனர் என்பதும், தீவிரவாத போதனைகளைப் பரப்புவதற்காக வெளிநாட்டு இஸ்லாமிய போதகர்கள் இலங்கைக்கு வருகிறார்கள் என்பதும் புறக்கணிக்கப்பட்டது. ஈஸ்டர் ஞாயிறு தற்கொலை குண்டுதாரிகள் 2018 மார்ச் 23 முதல் 25 வரை லெவெல்லவில் உள்ள விருந்தினர் விடுதியில் பயிற்சி முகாம்களை நடத்தியுள்ளனர். மேலும் 2018 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நுவரெலியாவில் உள்ள விருந்தினர் மாளிகையில் கூடுதலான கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவை அனைத்தும் பொலிஸில் புகாரளிக்கப்பட்டன. விசாரிக்கப்படவில்லை.

2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 27 ஆம் திகதி அதிகாலை காத்தான்குடியில் வெடிமருந்துகளை பரிசோதித்தபோது சஹறான் ஹாசிமின் சகோதரர் ரில்வான் படுகாயமடைந்தார்.

முன்னர் குறிப்பிடப்பட்ட வவுணதீவு மற்றும் வனாத்தவில்லு சம்பவங்களைத் தவிர,

2018 டிசெம்பர் மாத இறுதியில் மாவனல்லையில் புத்தர் சிலைகள் சேதப்படுத்தப்பட்டன.

ஜனாதிபதி ஆணைக்குழு அவதானித்தபடி, இந்த ஆரம்ப சம்பவங்களில் ஏதேனும் ஒன்றை சரியான முறையில் விசாரணை செய்தால், பயங்கரவாதிகளை முன்கூட்டியே கைது செய்து தற்கொலை குண்டுத் தாக்குதல்களைத் தடுக்க முடியும். இந்த விசாரணைகளுக்குப் பொறுப்பானது இராணுவப் புலனாய்வுப் பிரிவினல்ல, பொலிஸ்துறையே.

இந்த முழு காலகட்டத்திலும் நான் அதிகாரத்தில் இல்லை என்பதைத் தவிர, உளவுத்துறை மற்றும் ஆயுதப்படைகளின் பல உறுப்பினர்களைப் போல, அரசாங்கத்தின் இடைவிடாத துன்புறுத்தலின் விளைவாக 2015 ஆம் ஆண்டு முதல் 2019 நவம்பரில் நான் ஜனாதிபதியாகும் வரை நானும் ஒரு பொலிஸ் பிரிவில் இருந்து மற்றொன்றுக்கும் ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றுக்கும் சென்று கொண்டிருந்தேன்.

இந்த சமீபத்திய படத்தில் என் மீதும் எனது அரசு மீதும் கூறப்பட்ட மற்றொரு குற்றச்சாட்டு-நான் ஜனாதிபதியாகி, விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரிகளை இடமாற்றம் செய்து விசாரணையை நாசப்படுத்தினேன் என்பது.

இது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர பற்றிய குறிப்பு என்று நான் கருதுகிறேன். உயர் நீதிமன்றத்தில் நடந்து வரும் குற்றவியல் வழக்கின் முடிவில் செல்வாக்கு செலுத்த அரசியல்வாதி ஒருவருடன் அவர் சதி செய்ததாக கசிந்த தொலைபேசி பதிவுகள் வெளிப்படுத்தின.

மேலும் அவரை எந்த ஒரு அரசாங்கமும் எந்த சூழ்நிலையிலும் சிஐடியில் பொறுப்பான பதவியில் வைத்திருக்க முடியாது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நான் ஆட்சிக்கு வந்த பின்னர் இடமாற்றம் செய்யப்படவில்லை.

எவ்வாறாயினும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கும் நான் ஆட்சிக்கு வந்ததற்கும் இடையில் ஏறக்குறைய ஏழு மாத இடைவெளி இருந்தது, அந்தக் காலப்பகுதியில் விசாரணைகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2016 மற்றும் 2019 க்கு இடையில் கவனக்குறைவாக செயற்பட்டவர்களில் SSP அபேசேகரவும் ஒருவர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, தனது அறிக்கையை வெளியிட்ட போது, அதை நான் பகிரங்கப்படுத்த மறுத்தேன் என சனல் 4 குறிப்பிடுகிறது. அது அப்பட்டமான பொய். அது பாராளுமன்றத்தில் கூட தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது இலங்கையில் உள்ள அனைவருக்கும் தெரியும். கடந்த ஆண்டு, ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளுடன் சிலர் என்னை தொடர்புபடுத்தத் தொடங்கியபோது, ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளில் எவ்.பி.ஐ/சி.ஐ.ஏ உதவியைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு வாஷிங்டனில் உள்ள தூதுவர் மஹிந்த சமரசிங்கவிடம் நான் அறிவுறுத்தினேன்.

ஏப்ரல் 7, 2022 அன்று, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்புப் பணியகத்தின் கிறிஸ்டோபர் ஏ. லாண்ட்பெர்க், தூதுவர் சமரசிங்கவுக்குக் கீழ்க்கண்டவாறு எழுதினார்:

“ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைக்கான இலங்கையின் கோரிக்கையை எங்களுடன் எழுப்பியதற்கு நன்றி. தாக்குதலுக்குப் பின் உடனடியாக, இன்றுவரை, அமெரிக்க அரசாங்கம் பொறுப்பானவர்களை விசாரணை மற்றும் வழக்குத் தொடர உதவிகளை வழங்கியது. 2021 ஜனவரியில் அமெரிக்க குடிமக்களின் இறப்பிற்கு காரணமானவர்கள் மீது நீதித்துறை ஒரு குற்றப் புகாரை தாக்கல் செய்தது. அதன் வெளிச்சத்தில், உங்கள் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவை வழங்க நாங்கள் தயாராக இருந்தாலும், தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா கூடுதல் விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை. இந்த வழக்கில் எங்களது ஒத்துழைப்பின் அடிப்படையில், நான் முன்னிலைப்படுத்த விரும்புகிறேன். அமெரிக்க பெடரல் பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன் இலங்கையின் சட்ட அமலாக்கத்துடன் நெருக்கமாகப் பணியாற்றியதாகவும், தாக்குதலுக்குப் பிறகு ஒரு வாரத்தில், இலங்கையின் குற்றவாளிகளுக்கு உதவுவதற்காக சுமார் 33 பணியாளர்களை கொழும்புக்கு அனுப்பியது.

அவர்களின் விசாரணையின் அனைத்து அம்சங்களையும் கொண்ட புலனாய்வுத் துறை. இந்த முயற்சிகளில் சாட்சியங்கள் சேகரிப்பு, சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நேர்காணல்கள் மற்றும் டிஜிற்றல் சாதனங்களின் கண்காணிப்பு ஆகியவை அடங்கும்-”

இந்தக் கடிதத்தில், இலங்கை சட்டமா அதிபரால் ஏதேனும் கூடுதல் கோரிக்கைகள் விடுக்கப்பட்டால், 2022 ஏப்ரலில் கொழும்பில் அந்த நேரத்தில் இருந்த இரண்டு அமெரிக்க வழக்குரைஞர்களிடமிருந்து ஆதரவை வழங்க முடியும் என்றும் லேண்ட்பெர்க் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக 8 ஆம் திகதி ஜனவரி 2021, அமெரிக்க நீதித்துறை ஒரு ஊடக வெளியீட்டை வெளியிட்டது. அதில்-

“- நியமிக்கப்பட்ட வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்கு (ஐ.எஸ்.ஐ.எஸ்) பொருள் உதவி வழங்க சதி செய்தல் உட்பட பயங்கரவாதக் குற்றங்களுக்காக மூன்று இலங்கை பிரஜைகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர்கள் ‘இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ்’ என்று தங்களை அழைத்துக் கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ் ஆதரவாளர்கள் குழுவின் ஒரு பகுதியாக இருந்தனர். தெற்காசிய நாடான இலங்கையில் 2019 ஈஸ்டர் தாக்குதல்களுக்கு அந்தக் குழு பொறுப்பேற்றுள்ளது. இதில் ஐந்து அமெரிக்க குடிமக்கள் உட்பட 268 பேர் கொல்லப்பட்டனர் மற்றும்

(16ம் பக்கம் பார்க்க)

# புதிய வீடுகள் அமைப்போருக்கு தென்னங்கன்றுகள் விநியோகம்

மட்டக்களப்பு, செப். 08

மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேசத்தில் புதிய வீடுகள் அமைப்பவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச சபை கட்டடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

ஆரையம்பதி பிரதேச சபை எல்லைக்குள் தேசிய வீடமைப்புத் அபிவிருத்தி அதிகாரசபை திட்டத்தின்கீழ் புதிய வீடுகளை கட்டுபவர்கள் மற்றும் புதிதாக வீடு கட்டுவதற்கென அனுமதி பெற்றவர்களுக்கான தென்னங்கன்றுகள் நேற்று முன் தினம் மண்முனைப் பற்று பிரதேச சபை செயலாளர் ஜே. சர்வேஸ்வரன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் எனும் அரசின் வேலைத்திட்டத்தின்கீழ் இத் தென்னை மரங்கள் தென்னை அபிவிருத்தி அதிகார சபையினால் சுமார் 136 தென்னங்கன்றுகள் 68 பயனாளிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டன.



இதே வேளை மண்முனைப் பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கும் தென்னங்கன்றுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் திருமதி. ரவீந்திரன், ஆரையம்பதி பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் றம்லத் ஹுசைன், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், தென்னை அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களென பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கிண்ணியா மத்திய கல்லூரியின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வு



திருமலை, செப். 08

கிண்ணியா மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலையின் குடிதண்ணீர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு நடவடிக்கையொன்றை எடுத்துத்தெருமாறு பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைவாக ஐ.எஸ்.ஆர்.சி நிறுவனத்தின் அனுசரணையுடன் இத்திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தௌபீக்கினால் கடந்த புதன்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் முளவ்பர், பழைய மாணவர் சங்ககத்தின் செயலாளர் சனான் ஆசிரியர், ஐ.எஸ்.ஆர்.சி பிரதிநிதி லபீப் மற்றும் கல்லூரியின் ஆசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# வாழ்வாதார உதவி வழங்கல்



மட்டக்களப்பு, செப். 08

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குபட்ட ஆலம்குளம், மற்றும் சம்புநகர் பிரதேசங்களில் வாழும் குடும்பங்களுக்கு உலர்உணவு பொருட்கள், மற்றும் கற்றல் உபகரணங்ள் என்பன வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மிசேரியோ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இவ் உபகரணங்களை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஷாபீர் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கினார். உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர்,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



காரைதீவு கொம்புச் சந்தியில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம் பெற்ற கிருஷ்ண ஜெயந்தி நிகழ்வின் காட்சி இது. (அ)

# கல்முனையில் வரலாற்று நூல் வெளியீடு

நிந்தவூர், செப். 08

கலைஞன் க.குலேந்திரனின் “மறைக்கப்பட்டதும் மறக்கப்பட்டதும் - வரலாற்றுக்குள்ளிவர்கள்” வரலாற்றுநோக்கு நூல் வெளியீடு இடம்பெற்றது.

கலைமாமணி கா.சந்திரலிங்கம் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆசியுரையை அருட்கவியரசு விஸ்வப்பிரம்ம வை.ஈ.எஸ்.காந்தன் குருக்கள் வழங்கியிருந்தார்.

கல்முனை வடக்கு கலாசார பேரவையால் வெளியிடப்பட்ட இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் கலந்துகொண்டு உரையாற்றியாற்றிதுடன் முதல் பிரதியையும் கலாபூசணம் கா.சந்திரலிங்கம் அவர்களுக்கு வழங்கி வெளியிட்டுவைத்தார்.

இவ்வெளியீட்டு விழாவின் நூல் அறிமுக உரையை ஓய்வுநிலை அதிபர் வீ.பிரபாகரன் நிகழ்த்தியதுடன் நூல் வெளியீட்டு உரையை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதிப்பதிவாளர் சஞ்சீவி சிவகுமார் நிகழ்த்த நூல் பற்றிய சிறப்புரையை ஓய்வுநிலை ஆசிரிய நிலைய முகாமையாளர் கி.செல்வராசா நிகழ்த்தினார்.



வன்னிமையின் சிறப்புகள் மற்றும் நூலாசியரியர் கே.குலேந்திரனுக்கு வன்னிமை செல்லையாவுடன் இருந்த தொடர்புகளால் தான் அறிந்த வன்னிமை தொடர்பான விடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் க.குலேந்திரன் எதிர்கால சந்ததிக்கு வன்னிமை தொடர்பில் எடுத்தியம்பும் ஆரம்பநிலை நூலாக இதனை ஆக்கியுள்ளார்.

சதா.ரகுவரன் (பிரதேச செயலகம், கல்முனை வடக்கு) தொகுத்து வழங்கிய இந்நூல் வெளியீட்டு விழாவில் கல்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ரீ.பிரபாகரன், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் நலன்விரும்பிகளென பலரும் கலந்துகொண்டனர்.

(அ-06)

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை

அம்பாறை, செப். 08

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற பிரதீபா போட்டியின் இந்த வருடத்துக்கான போட்டியில், சித்திரம் வரைதல் மாகாண மட்டப் போட்டிகளின் முடிவுகள் நேற்று முன் தினம் புதன்கிழமை வெளியாகியது.



இதன் பிரகாரம் இந்தப் பிரதீபாப் போட்டிகளில் நாடுபூராகவும் இருந்து சுமார் 200க்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்கு பற்றியிருந்தன. அதில் அனைத்துப் பிரிவுகளிலும் போட்டி நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

இக் கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் முதல் முறையாக சிரேஷ்ட பிரிவில் கலந்துகொண்டு மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளது.

இந்த சித்திரப் போட்டியில் கலந்து வெற்றியீட்டிய சித்திரப் பாடநெறி மாணவர்களான எம். எல். பாத்திமா ஜியாமுதலாம் இடத்தையும் ஜே. றின்சான் இரண்டாம் இடத்தையும் பெற்று, கலாசார மத்திய நிலையத்திற்கும் ஊருக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

(அ)

# உக்ரைனுக்கு மேலும் இராணுவ உதவிகள்!

## அமெரிக்கா அறிவிப்பு!

வாஷிங்டன், செப். 08

**உக்ரைனுக்கு மேலும் 175 மில்லியன் ரூபா பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.**

குறித்த இராணுவ ஆயுத தொகுதியில் ரஷ்ய விமானங்கள் மற்றும் ஏவுகணைகளுக்கு எதிராக செயற்படும் ஆயுதங்கள் உள்ளடங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போர் இடம்பெற்று வரும் நிலையில் யுக்ரேனுக்கு உதவும் முகமாக குறித்த



தொகை வழங்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பயனளிக்குமானால் மாத்திரமே இந்தியாவுடன் உடன்படிக்கை!



லண்டன், செப். 08


முழுமையாக பிரித்தானியாவுக்கு பயனளிக்குமானால் மாத்திரமே இந்தியாவுடன் வர்த்தக உடன்படிக்கை ஏற்படுத்தப்படும் என பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சவார்த்தைகள் முன்னேற்றமடைந்து வருவதாக பிரித்தானிய பிரதமரின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஒரு பெரிய ஏற்றுமதியாளராக மாறுவதை நோக்குமாகக் கொண்ட பிரித்தானிய வர்த்தக ஒப்பந்தத்தை இந்தியா முக்கியமானதாக காண்கிறது.

அதேநேரம் இந்த ஆண்டு இறுதிக்குள் பிரித்தானியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பநம் தொடர்பான பேச்சுவார்த்தையை முடிப்பதற்கு எதிர்பார்ப்பதாக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முன்னதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிலா, பூமியை செல்பி எடுத்த ‘ஆதித்யா எல்1’ விண்கலம்!




புதுடில்லி, செப். 08

பூமியில் இருந்து புறப்பட்ட 1 மணி நேரம் 3 நிமிடங்களில் ரொக்கெட்டில் இருந்து ‘ஆதித்யா எல்1’ விண்கலம் வெற்றிகரமாக பிரிந்து சென்றது.

பின்னர் புவிவட்டப்பாதையில் தனது பயணத்தை ‘ஆதித்யா எல்1’ விண்கலம் தொடர்ந்து வருகிறது.

விண்கலத்தின் சுற்றுவட்ட பாதை படிப்படியாக உயர்த்தப்பட்டு வருவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ‘ஆதித்யா எல்-1’ விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள கேமரா மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

அதில் விண்கலத்தின் வி.ஈ.எல்.சி மற்றும் சூட் கருவிகளின் புகைப்படம், நிலா மற்றும் பூமியின் புகைப்படம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், ‘சூரியனை நோக்கி தனது பயணத்தை மேற்கொண்டு வரும் ‘ஆதித்யா எல்-1’ விண்கலம், நிலா மற்றும் பூமியை செல்பி புகைப்படம் எடுத்துள்ளது’ என்று பதிவிடப்பட்டுள்ளது. (அ)

# பிரேசில் புயலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு!

பிரேசிலியா, செப். 08

பிரேசிலை தாக்கிய புயலால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

பிரேசில் நாட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு பெரும் புயல் ஏற்பட்டது.

இதனால் அந்நாட்டின் தெற்கு பகுதிகளில் உள்ள மாகாணங்கள் புயலால் அதிகம் பாதிக்கப்பட்டன.

புயலால் பெய்த கனமழை காரணமாக ஆறுகளில் நீர் மட்டம் அதிகரித்து நகரின் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடும் வெள்ளத்தில் சிக்கிய மியூகம் நகரின் பல அடுக்குமாடி குடியிருப்புகள் இடிந்து தரைமட்டமாகியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கு ஒரே வீட்டில் 15 பேரின் உடல்களை மீட்புப் படையினர் மீட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், பிரேசிலை



தாக்கிய புயலால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், இந்த சம்பவத்தால் பலர் படுகாயமடைந்துள்ள னதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயலில் வீடுகள் அடித்து செல்லப்பட்டதால் 2,300 பேரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. (அ)

# உக்ரைனுக்கு கொடுத்ததால் ஆயுத களஞ்சியம் காலியாகித் திண்டாடி வரும் நேட்டோ நாடுகள்!

பேர்ளின், செப். 08

உக்ரைனுக்கு ஆயுதங்களை அள்ளி இறைத்ததால் காலியாகியுள்ள இருப்புக்களை நிரப்ப மேற்கத்திய நாடுகள் திண்டாடுவதாக வெளியான தகவல்களின் மத்தியில், நெதர்லாந்து மற்றும் டென்மார்க்குடன் இணைந்து வெடிமருந்துகளின் கூட்டுக் கொள்முதல் குறித்து ஜேர்மனி பேச்சுவார்த்தை நடத்தி வரும் தகவல் வெளியாகியுள்ளது.

“இந்த ஆண்டின் தொடக்கத்தில் பாதுகாப்பு அமைச்சர் போரிஸ் பிஸ்டோரியஸ் உறுதியளித்தபடி, எங்கள் பங்காளிகளுக்கு அதன் கட்டமைப்பு ஒப்பந்தங்களை (வெடிமருந்துகள் கொள்முதல் செய்வதற்கான) திறக்க ஜெர்மனி தயாராக உள்ளது,” என்று ஆதாரமொன்றை மேற்கோளிட்டு ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், வெடிமருந்துகள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் உக்ரைனுக்கு ஆதரவாக 27 நாடுகளின் கூட்டாக வெடிமருந்துகளை கொள்முதல் செய்வதற்கான ஐரோப்பிய ஒன்றிய திட்டம் மெதுவாக முன்னேறி வருகிறது.

ஒரு முக்கிய படியாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 12 மாதங்களுக்குள் உக்ரைனுக்கு 1 மில்லியன் பீரங்கி குண்டுகள் அல்லது ஏவுகணைகளை வழங்க சுமார் 2 பில்லியன் யூரோக்கள் மதிப்பிலான இலக்கு திட்டத்திற்கு மார்ச் மாதம் ஒப்புக்கொண்டன.

நாடுகளின் தேசிய முயற்சிகளால் சுமார் 224,000 வெடிமருந்துகள் மற்றும் 2,300 ஏவுகணைகள் கிடைத்துள்ளன என்று ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல் கடந்த வாரம் கூறினார். ஆனால் கூட்டு கொள்முதல் திட்டத்தின் ஒரு பகுதியாக இதுவரை எந்த கொள்முதலும் அறிவிக்கப்படவில்லை.




உக்ரைன் போரில் இரு தரப்பினரும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பீரங்கி குண்டுகளை சுடுவதன் மூலம் ஒரு தீவிரமான மோதலாக வளர்ந்துள்ளது. இதனால் இப்போது மேற்கு நாடுகளும் மிகக் குறைந்த விநியோகத்தில் உள்ளன. (அ)

# சனல்-4 வீடியோவை இலங்கையர் அனைவருமே பார்க்கவேண்டும்!

## அகிம்சா விக்கிரமதுங்க கோரிக்கை

கொழும்பு, செப். 08

**சனல் 4 வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த காணொலியை அனைத்து இலங்கையர்களும் பார்க்கவேண்டும் என படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா தெரிவித்துள்ளார்.**

ருவிட்டர் பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மைகளை அம்பலப்படுத்தும் சனல் 4 இன் வீடியோவை பார்த்த பின்னர் ஏற்பட்ட உணர்வுகளை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

பல வருடங்களாக இந்த தாக்குதலுக்கும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தொடர்பிருக்கவேண்டும் என நான் கருதி வந்துள்ளேன்.

இது அனைத்து இலங்கையர்களும் பார்க்கவேண்டிய மிக முக்கியமான படமாகும்-என்றார். (அ)



# ரயிலின் முன் பாய்ந்து தந்தையும் மகளும் உயிரை மாய்த்த துயரம்!

கொழும்பு, செப். 08

திருகோணமலையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி சென்ற இரவு தபால் சேவை ரயிலின் முன் தந்தையும், மகளும் பாய்ந்து உயிர் மாய்த்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு கந்தளாய் - பராக்கிரமாவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை - கந்தளாய் புகையிரத நிலைய தண்டவாளத்தின் அருகே தந்தையும், மகளும் நீண்ட நேரமாக நின்று கொண்டிருந்தனர் எனவும் ரயில் வந்ததும் தந்தையும், மகளும் ரயிலின் முன்னே குதித்தனர் எனவும் நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

இவரது மனைவி குவைத் நாட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றி வரும் நிலையில் அவர் வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருப்பதாகவும் கேள்வியுற்ற கணவன் விரக்தியில் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு உயிரை மாய்த்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இச்சம்பவத்தில் 38 வயதுடைய தந்தையும் 6 வயதுடைய மகளும் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கொழும்பு மாநகர சபை பணியாளர் போதைப்பொருளுடன் யாழில் கைது

யாழ்ப்பாணம், செப். 08

யாழ். பஸ் நிலையத்தில் வைத்து கொழும்பு மாநகர சபையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று காலை குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது சந்தேகபரிடமிருந்து 30 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது

46 வயதுடைய சந்தேக நபர், ஹெரோயினை விற்பனை செய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகபர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (அ)

# பல்கலைக்கழக கல்விக்காக 45 ஆயிரம் மாணவர்கள் பதிவு

கொழும்பு, செப். 08

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூற்றுப்படி, 2022/23 கல்வியாண்டில் பல்கலைக்கழக கல்விக்காக 45,000 மாணவர்கள் பதிவு செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பான விண்ணப்பங்கள் எதிர்வரும் செப்டம்பர் 14ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என அதன் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

மேலும், விண்ணப்பக் கையேட்டை அங்கீகரிக்கப்பட்ட புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் கூறினார்.

# எம்முடன் இணக்கப்பாட்டுக்கு வந்தால் தயாசிறியை மீண்டும் இணைப்போம்!

## கூறுகின்றார் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, செப். 08

சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைத் தவிர வேறு எந்தப் பதவியையும் வழங்கி தயாசிறி ஜயசேகரவை மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ள விரும்புவதாக அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கட்சியுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து, அவர் செய்யும் பல செயல்களை நிறுத்துவதன் மூலம் தற்காலிகமாக கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள தயாசிறி ஜயசேகரவை மீண்டும் கட்சியில் இணைக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு



பதிலளிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தயாசிறியை நீக்கவில்லை. தற்காலிகமாக அவரது வேலைகளை நிறுத்தினோம்.

என்னை கட்சியின் தலைமை பதவியில் இருந்து நீக்கியமை தொடர்பான நீதிமன்ற வழக்கு நடைபெறவுள்ளது. இது போன்ற பல விடயங்கள் இருக்கின்றன. அவை பற்றிய தகவல்களை கூற விரும்பவில்லை. எந்த பிரச்னைகளும் இன்றி அவர் கட்சிக்கு வரலாம். கட்சியின் செயலாளர் பதவி இன்றி அவரை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். வேறு எந்த பதவியையும் அவருக்கு வழங்குவோம்.

கட்சியின் அங்கத்துவத்தில் இருந்தே தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். அவர் செய்யும் தேவையில்லாத வேலைகளை நிறுத்தி விட்டு, எங்களுடன் இணக்கப்பாட்டுக்கு வந்த எந்த நேரத்திலும் அதனை இரத்துச் செய்து கொள்ளலாம்.

இது கட்சி மற்றும் அரசியல் சபையின் முடிவு-என்றார். (அ)

# சிறுமிக்கு நீதி கிடைக்க சுகாதார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அங்கஜன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 08

யாழ். போதனா வைத்தியசாலையில் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறச் சென்ற சிறுமி வைசாலியின் கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற உரிய விசாரணைகள் இடம்பெற்று பாதிக்கப்பட்ட சிறுமிக்கும்-சிறுமியின் குடும்பத்துக்கும் நீதி கிடைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்-பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்-

மரணிக்கும் தறுவாயில் இருக்கும் உயிரைக்கூட மருத்துவத்தால் மேலும் சில வருடங்களுக்கு வாழ வைக்கக்கூடிய தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ள இந்தக் காலத்தில், அதே மருத்துவத்தால் ஓர் பாலகியின் கை இழக்கப்பட்டுள்ளது.

இந்தச் துயரச் சம்பவத்தால் இன்று மருத்துவமனைகளை நாட மக்கள் அச்சம் கொள்கின்றனர். மருத்துவமனை சென்றால் வீடு திரும்புவோமா? என்ற அச்சத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அதிசிறந்த வைத்திய நிபுணர்களை கொண்ட எமது யாழ். போதனா வைத்தியசாலை எத்தனையோ உயிர்களை இன்றும் வாழ வைத்து வருகின்றது. அதே சமயம் ஒரு சிலரின் அசண்டையீனங்களால் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தி வரலாற்றில் அழிக்க முடியாத கரும்புள்ளியையும் பதித்து விடுகிறது. அவ்வாறான ஓர் சம்பவம் தான் வைசாலியின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட துயரமான நிகழ்வு.

கடவுளுக்கும் மேலாக நாம் வைத்தியர்களையும்-சுகாதார தரப்பினரையும் நம்புகிறோம். அந்த நம்பிக்கையை அவர்கள் பல சந்தர்ப்பங்களிலும் நிரூபித்தும் காட்டியுள்ளனர். உதாரணமாக கொரோனா பேரிடர் காலத்தில் அவர்கள் ஆற்றிய பணிகளை மறந்து விட முடியாது. ஆனால் அதே சுகாதாரத் துறையில் ஒரு சிலர் விடுகின்ற தவறுகள் ஒட்டுமொத்த பணியாளர்கள் மீதான நம்பிக்கையையும் ஓர் நொடியில் சிதைத்து விடுகின்றது.

பல எதிர்கால கனவுகளோடு தனது வாழ்வை வாழக் கூட ஆரம்பிக்காத அந்த சிறுமியாலும்-சிறுமியின் குடும்பத்தாலும் நிச்சயமாக இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. காய்ச்சலுக்கு சிகிட்சை பெற வந்த சிறுமி கையை இழந்தனை எந்த வகையில் ஏற்றுக்கொள்ள முடியும்?

அண்மைக்காலமாக இலங்கையின் மருத்துவத்துறை மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த விமர்சனங்களை இலகுவில் கடந்து விட முடியாது. பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். அதேபோன்றே நடந்தது என்னவென்று இதுவரை உணர முடியாத இந்த பாலகி வைசாலிக்கும் பக்கச்சார்பற்ற நீதி கிடைக்க சுகாதார அமைச்சு மற்றும் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)



## இலங்கை...

போக்குவரத்து ஆரம்பிக்கப்படவிருந்தது.

மாநில அரசின் ஒத்துழைப்புடன், மத்திய கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சு இந்த பணியை நேரடியாக மேற்கொள்ளவுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து தலை மன்னார் மற்றும் காங்கேசன்துறைக்கு இரு வழித்தடங்களில் பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க தமிழக கடல் சார் வாரியம் தீர்மானித்துள்ளது.

தமிழக சட்டசபையில், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைவாயிலாக இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது.

இதற்காக, இராமேஸ்வரம் சிறு துறைமுகத்தில் கப்பல் அணையும் மேடை, பயணிகள் தங்குமிடம், சுங்கம் மற்றும் குடியுரிமை பிரிவு சோதனை மையங்கள் என்பவற்றை அமைக்க மத்திய நீர்வழி போக்குவரத்து அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டது.

ஆனால், தற்போது அனுமதி வழங்க இயலாது என அமைச்சு தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய அரசின் முன் அனுமதி பெறாமல் இந்த திட்டத்தை அறிவித் தமையே இதற்கான காரணமென எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், தமிழக கடல் சார் வாரியம், அனுமதியைப் பெறுவதற்கான தொடர் முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

## ஈஸ்டர்...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த் த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரு வருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற பாரிய மக்கள் போராட்டங்களை கருத்தில் கொண்டு, வரலாற்று மாற்றத்தின் சவால்களை யதார்த்தமாக்குவதற்கு அர்ப்பணிக்க வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதனால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நீதி, நியாயம், உண்மை என்பன நிறைவேற்றப்படாமல் வேதனையுடன் வாழ்ந்து வருவதாக ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்று அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அவ்வாறானதொரு பொறிமுறைக்காக உண்மையான பின்னணியை தயார் செய்யவேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச கொள்கைக்கு முரணானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்மொழியப்பட்ட உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலமானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் 19-3 பிரிவு மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தின் மீது தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிமனித உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை போன்றே இதுவும் அமைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## சனல்...

தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் கொதிப்படைந்த கோட்டாபய ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் சிலர், தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் நல்லிணக்கத்திற்கான இயக்கம் என்ற பெயரில் நேற்று பிற்பகல் பிரிட்டன் தூதரகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்தனர். (அ)

## புலம்பெயர்..

பல்வேறு செய்திகளையும் காணொளிகளையும் சனல் 4 அறிக்கை யிடும் என்றும், சனல் 4 அலைவரிசை யானது புலம்பெயர் தமிழர்களின் நட்பு சனல் எனவும், அது ஒளிபரப்பியதை போல போது ஏதேனும் சம்பவம் நடந்திருந்தால் முழுமையான விசாரணை நடத்தப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

## யாழ்...

வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 8 வயது சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட கனுலா தவறாக பொருத்தப்பட்டதால், சிறுமியின் பாதிப்புக்கு உள்ளான நிலையில், சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

அது தொடர்பில் சுகாதார அமைச்சு, யாழ். போதனா வைத்திய சாலை, வட மாகாண ஆளுநர் ஆகியோரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், பெற்றோரினால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்களை பதிவு செய்திருந்தினர்.

அதனை தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து நிலையில், பெற்றோர் சார்பில் குறித்த தாதி வெளிநாடு தப்பி செல்லாதவாறு பயணத்தடை விதிக்க வேண்டும் என மன்றில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட மன்று தாதிக்கு பயணத் தடை விதித்தது டன், வழக்கினை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (அ)

## கொக்குத்...

சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோம தேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ், யாழ்ப் பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ. பிரணவன், சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், தடயவியல் பொலிஸார், விஷேட அதிரடிப் படையினர் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இது குறித்து சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

இந்த அகழ்வு பணியின் போது ஒரு சில மேலதிக மனித எலும்புக்கூடுகள் இனங்காணப்பட்டுள்ளது. தொடர்ந்து அகழ்வு பணி இன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

வேறு தடயப் பொருட்களும் நேற்று கண்டெடுக்கப்பட்டன. துப்பாக்கி ரவைகள் என சந்தேகிக்கப்படும் ஒரு சில உலோகத் துண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் சில ஆதார சான்று பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான ஆராய்வு மேற்கொள்ளப்பட்டு அறிய தரப்படும்-என்றார். (அ)

# செக் குடியரசிலிருந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட குரங்குகள்!

கொழும்பு, செப். 08

செக் குடியரசுடனான விலங்குகள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் 3 பறவைகள் மற்றும் 4 குரங்குகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இதற்கமைய, செக் குடியரசிலிருந்து 3 'ஈமு' பறவைகள் மற்றும் 4 குரங்குகள் என்பன கொண்டு வரப்பட்டுள்ளன.

சுமார் 04 மாத வயதுடைய இந்த ஈமு பறவைகள் அவுஸ்திரேலியாவை தாயகமாக கொண்டவையாகும்.

அனைத்துண்ணி விலங்கான மடகஸ்காரை பூர்வீகமாகக் கொண்ட ரிங் ரெய்ல்ட் லெமுர் குரங்குகள் அழிவடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

இரண்டு வயதுடைய 02 ஆண் குரங்குகளும் 11 வயதுடைய 2 பெண் குரங்குகளும் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த விலங்குகள் பின்னவலை வாகொல்ல மிருகக்காட்சி சாலையில் ஒரு மாதத்திற்கு தனிமைப்படுத்தப் படவுள்ளன.

அதன் பிறகு, இந்த விலங்குகள் அதே மிருகக்காட்சி சாலையில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (அ)

# வாகனங்களின் உதிரிப்பாகங்களை களவாடும் சம்பவங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 08

கொழும்பு நகரில் உள்ள வாகன தரிப்பிடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களின் கண்ணாடி உள்ளிட்ட உதிரி பாகங்கள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கொழும்பு மாநகர சபையின் போக்குவரத்து திட்டமிடல் மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பணிப்பாளர் மஞ்சுள குலரத்ன இதனைத் தெரிவித தார்.

மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, கார்கள் போன்றவற்றின் கண்ணாடிகள் உள்ளிட்ட உதிரிபாகங்கள் களவாடப்படுகின்றமை தொடர்பில் அதிகளவு முறைப்பாடு பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யானை தாக்கி முதியவர் பலி!

திருமலை, செப். 08

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டித்திடல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை யானை தாக்குதலுக்குள்ளாகி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தோப்பூர் -பட்டித்திடல் பகுதியைச் சேர்ந்த முருகன் இராச சிங்கம் (வயது 69) என பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த நபர் சேனைக் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. யானையானது பாதுகாப்பு வேலியையும் சேதப்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு மூதூர் பொலிஸார் சென்று சடலத்தை பார்வையிட்டனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## இறக்குமதி...

ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால் 3,000 இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்தியது.

அத்தியாவசியப் பொருட்கள் முதல் வாகனங்களின் இறக்குமதியையும் அரசாங்கம் கட்டுப்படுத்தியது. இந்நிலையில், மெல்ல மெல்ல இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தி வருகிறது. கடந்த மாதம் 300 இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாட்டை அரசாங்கம் தளர்த்தியிருந்தது.

இந்நிலையில், இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் தெரிவிக்கையில்-

வட்டி விகிதங்களை குறைக்கவும், பொருளாதார நெருக்கடியை குறைக்கவும் அரசாங்கம் பல்வேறு தீர்மானங்களை எடுத்துள்ளது. கடந்த காலத்தில் 3000 இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

தனியார் மோட்டார் வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் ஆண்டு இறுதிக்குள் நீக்கப்படும். இலங்கை கடந்த சில மாதங்களாக இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்தியுள்ளது.

மோட்டார் வாகனங்களின் இறக்குமதியானது வரி வருவாய்களை இழக்க வழிவகுக்கும் என்பதால் தொடர்ந்து அவற்றுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படாதுள்ளன.

கடன்களை பெற அதிக வட்டி விகிதங்களை பேண வேண்டிய தேவையுள்ளது.

கார்கள் இறக்குமதிக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. அத்துடன், டொலர்களைதான் செலவழிக்க வேண்டியுள்ளது - என்றார். (அ)

## முல்லைத்தீவில்...

பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## சர்வதேச...

நேரம் மிகுந்த செல்வாக்கானவர்கள். குடிவரவு குயகல்வு திணைக்களத்திலும் ஆவணங்களிலும் மாற்றம் செய்து இலங்கை வந்து சென்றிருக்கலாம் - என்றார். (அ)

## தற்கொலை...

முன்வைக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிங்களத் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு முஸ்லிம் பயங்கரவாதிகள் 9 பேரும் கர்ப்பிணித்தாய் ஒருவரும் தற்கொலை செய்துக்கொண்டார் என்பதை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு முட்டாள்களா நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்று தான் என்னால் கேட்க முடியும்.

இந்த தாக்குதலுக்கு நல்லாட்சி பொறுப்பு கூற வேண்டும் என்ற உறுதியில்தான் அன்றும் இன்றும் இருக்கின்றோம்.

இந்த தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி சிறையில் சிரித்துக்கொண்டு இருப்பார்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# சனல் 4 விவகாரத்தில் சத்தமின்றி இருங்கள்!

## ரணிலின் திட்டம் இதுதானாம்

கொழும்பு, செப். 08

**ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கான பெரும் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது என்ற தகவலை சனல் 4 வெளியிட்டிருந்தது. இந்த விவகாரத்தினால், அரசாங்கம் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.**

கடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்த விவகாரம் ஆராயப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு முன்னதாக சனல் 4 இந்த ஆவணத்தை வெளியிட்டது, ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுத்தவே என அரசாங்கம் கருதுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சனல் 4 வழமை போன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடருக்கு முன்னதாக இந்த ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளதாகவும், எனவே அரசாங்கம் அவசரமாக நடவடிக்கை எடுக்கக்கூடாது, ஒட்டுமொத்த அரசாங்கமும் பதிலளிக்காமல் இருப்பதெனவும், அதற்குப் பதிலாக, குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் மட்டுமே பதிலளிக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், குற்றச்சாட்டுகளை விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்குமாறு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையான கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கருத்து கேட்கப்பட்டபோது, முறைசாரா வழிகளில் சில பாராளுமன்ற உறுப்பினர்களின் இத்தகைய நோக்கங்கள் குறித்து கேள்விப்பட்டபோதிலும் தமக்கு அவ்வாறான கோரிக்கை எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என தெரிவித்தார். (அ)

## தடுப்பூசி செலுத்தப்பட்ட மற்றொரு குழந்தை மரணம்

கொழும்பு, செப். 08

வெலிகம-நலவன பகுதியில் தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர், 4 மாத குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசி விசமானமையே இறப்புக்கான காரணம் என குழந்தையின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி நான்கு மாதத்திற்கான தடுப்பூசி, வெலிபிட்டிய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் குறித்த குழந்தைக்கு செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, அந்தக் குழந்தைக்கு ஏற்பட்ட கடும் குளிர் காரணமாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே இறந்திருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது. (அ)

## மருத்துவர் ஒருவரை உருவாக்க ரூ. 4 மில். வரிப்பணம் ஒதுக்கீடு

கொழும்பு, செப். 08

வரி செலுத்தும் மக்களின் பணத்தில் வைத்தியர் ஒருவரை உருவாக்குவதற்கு சுமார் நான்கு மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், " மருத்துவ மாணவர் ஒருவர் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு கல்வியை நிறைவு செய்வதற்கு மக்களின் பணத்தில் இருந்து 40 இலட்சத்து 92,915 ரூபாய் செலவிடப்படுகிறது.

இது மாதாந்த அடிப்படையில் 68,215 ரூபாவாகும்.

வரி செலுத்துவோர் பொறியியல் மாணவர் ஒருவருக்கு 2.1 மில்லியன் ரூபாவும், முகாமைத்துவ மாணவருக்கு 1 மில்லியன் ரூபாவும், கலைத்துறை மாணவர் ஒருவருக்கு 1.3 மில்லியன் ரூபாவும் வரி செலுத்தும் மக்களின் பணத்திலிருந்து ஒதுக்கப்படுகிறது.-என்றார். (அ)

## வறட்சியால் இலங்கை மின்சார சபைக்கு 3 ஆயிரத்து 300 கோடி ரூபாய் நட்டம்

கொழும்பு, செப். 08

வறட்சியினால் மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ள நிலையில், செலவின சீர்திருத்தக் கட்டணங்களை உடனடியாக மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபையினால் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டணக் குறைப்பினால் தற்போதும் இலங்கை மின்சார சபை 3,300 கோடி ரூபாய் நஷ்டத்துடன், பெரும் நட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என சபையின் பொது முகாமையாளர் ஆணைக்குழுவிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

வறட்சியினால் நீர்மின் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் கடந்த 7ஆம் திகதி வெளியிட்ட முன்னறிவிப்பிற்கமைய, இந்த நிலைமை ஒக்ரோபர் மாதம் வரை நீடிக்கலாம் என மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனவரி முதல் ஜூலை இறுதி வரை நாளொன்றுக்கு 44.16 ஜிகா வாட் மணிநேரமாக இருந்த மின்சாரத் தேவை ஓகஸ்ட் மாதத்தில் 48.61 ஆக அதிகரித்துள்ளது என மின்சார சபை கூறியுள்ளது.

இதன் பின்னணியில், அனல் மின் உற்பத்திக்கு அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது என அதன் பொது முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கக் கொள்கைக்கு அமைய மின்சாரக் கட்டணங்கள் உற்பத்தி செலவிற்குப் பொருந்த வேண்டும் என்பதால், கொள்கை வழிகாட்டுதலின் கீழ் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கடிதத்தின் ஊடாக கட்டணத்தை அதிகரிக்குமாறு கூற வில்லையெனவும் தமது அசௌகரியத்தை தெரிவித்துள்ளோம் என்றும் மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டண உயர்வு குறித்து ஆணைக் குழுவே தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கு ஏன் நீதி நிலைநாட்டப்படவில்லை?

### ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பிய சஜித்



கொழும்பு, செப். 08

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் பயணத்தில் பெரும் பக்கபலமாக இருந்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளுக்கு என்ன நடந்தது? இதன் பின்னணியில் உள்ள நபர்கள் மற்றும் குழுக்களை அம்பலப்படுத்துவீர்களா? இல்லையா? என எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியிடம் இந்தக் கேள்வியை எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பினார்.

லசந்த விக்கிரமதுங்கவை கொன்ற கொலையாளிகள் பாராளுமன்றத்தில் இருந்தால் அந்த நபர்களின் பெயர்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும், இது தொடர்பாக கேள்வி எழுப்ப தாம் ஒருபோதும் பயப்படவில்லை என்றும், இந்த விடயத்தில் உரிய நீதி கிட்ட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் வலியுறுத்தினார்.

இதேவேளை, 22 மில்லியன் மக்களின் நலனுக்காக அரசாங்க தரப்பு பாடுபடுவதாக கூறினாலும் 600-700 பில்லியன் அரச வருமானத்தை இழந்து பெரும் செல்வந்தர்களுக்கு அரச தரப்பு வரிச்சலுகை கொடுத்ததாலேயே நாட்டில் இந்த நிலை உருவானது.

அதனால் ஏற்பட்ட பொருளாதாரக் குழப்பத்தால் வங்குரோத்து நிலை ஏற்பட்டது. அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாகக் குறைப்பது தொடர்பான வரிச்சலுகைகளை வழங்க கை தூக்கியவர்கள் தரப்படுத்தல் முகவாண்மையாளர்கள் நம் நாட்டை தரப்படுத்தலில் தரம் இறக்கிய போது சிரித்தனர். இதன் காரணமாக மூலதனச் சந்தைக்கான அணுகல் இல்லாமல் போனது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## தொடர்ந்து மழை நீடித்தால் வெள்ளப்பெருக்கு ஏற்படும்

கொழும்பு, செப். 08

தொடர்ந்தும் மழையுடனான வானிலை நீடிக்குமாயின் களு, நில்வளா, கிங் மற்றும் அத்தனகலு ஓயாவை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயமுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையால் 5 மாவட்டங்களுக்கு பிறப்பிக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் தொடர்ந்தும் மழையுடனான வானிலை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மாத்தறை, புத்தளம், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றர் வரை மழை பெய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆசிய கிண்ண தொடர்:
# பங்களாதேஷுக்கு எதிராக பாகிஸ்தான் இலகு வெற்றி!



லாகூர், செப். 08

பங்களாதேஷுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் லாகூர் கடாபி விளையாட்டரங்கில் புதன்கிழமை நடைபெற்ற ஆசியக் கிண்ண சுப்பர் 4 ஆரம்ப போட்டியில் 7 விக்கெட்களால் பாகிஸ்தான் மிகவும் இலகுவாக வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த பங்களாதேஷை 194 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்திய பாகிஸ்தான் 39.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

நடப்பு ஆசிய கிண்ணத்தில் ஹரிஸ் ரவூப் பதிவு செய்த அதிசிறந்த பந்துவீச்சுப் பெறுதி, இமாம் உல் ஹக், மொஹமத் ரிஸ்வான் ஆகியோர் குவித்த அரைச் சதங்கள் என்பன பாகிஸ்தான் இலகுவாக வெற்றிபெற உதவின.

பக்கார் ஷமான் (20), அணித் தலைவர் பாபர் அஸாம் (17) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தனர். (74 - 2 விக்.)

இந்நிலையில் இணை சேர்ந்த இமாம் உல் ஹக், மொஹமட் ரிஸ்வான் ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 85 ஓட்டங்களை பகிர்ந்து பாகிஸ்தான் வெற்றி இலக்கை அண்மிக்க உதவினர்.

இமாம் உல் ஹக் 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 78 ஓட்டங்களை குவித்ததுடன், மொஹமத் ரிஸ்வான் 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸ் உட்பட 63 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

அகா சல்மான் 12 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்ததுடன் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் ரிஸ்வானுடன் 35 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

முன்னதாக, பங்களாதேஷ் மிக மோசமாகத் துடுப்பெடுத்தாடி 38.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 193 ஓட்டங்களுக்கு சுருண்டது.

சிரேஷ்ட வீரர்களான அணித் தலைவர் ஷகிப் அல் ஹசன், முஷ்பிகுர் ரஹீம் ஆகிய இருவரும் திறமையாக துடுப்பெடுத்தாடி அரைச் சதங்களைப் பெற்று அணியை ஓரளவு கௌரவமான நிலையில் இட்டனர்.

அவர்கள் இருவரும் 5ஆவது விக்கெட்டில் சரியாக 100 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

ஷகீப் அல் ஹசன் 53 ஓட்டங்களையும் முஷ்பிகுர் ரஹீம் 64 ஓட்டங்களையும் பெற்று துடுப்பாட்டத்தில் பிரகாசித்தனர். அவர்களை விட மொஹமத் நய்ம் மாத்திரமே 20 ஓட்டங்களை எட்டிப்பிடித்தார்.

அணியில் மீண்டும் இணைந்த லிட்டன் தாஸ் 16 ஓட்டங்களை பெற்றார்.

பாகிஸ்தான் பந்துவீச்சில் ஹரிஸ் ரவூப் 19 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் நசீம் ஷா 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியைத் தொடர்ந்து பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய இரண்டு அணிகளும் மீண்டும் இலங்கை திரும்பி எஞ்சிய சுப்பர் 4 போட்டிகளில் விளையாடவுள்ளன.

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான சுப்பர் 4 போட்டி நாளை சனிக்கிழமை நடைபெற வுள்ளது. (ஐ)

## பலன் டி ஓர் விருது பட்டியல் ரொனால்டோ பெயர் இல்லை!



பாரிஸ், செப். 08


வருடா வருடம் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களுக்கான பலன் டி ஓர் விருதை பிபா வழங்கி வருகிறது. 1956 முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதை வாங்குவதில் 2007ஆம் ஆண்டு முதல் மெஸ்ஸி, ரொனால்டோவுக்கு இடையே கடும் போட்டி நிலவி வந்தது.

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான விருதுக்கான பரிந்துரைக்கப்பட்டவர்களில் 60 (30 ஆண் மற்றும் பெண்) வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு டிசெம்பரில் கட்டாரில் நடந்த உலகக் கிண்ணத்தை ஆர்ஜென்ரீனா வெல்ல உதவுவதில் முக்கிய பங்கு வகித்த லயனல் மெஸ்ஸி இந்த பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

மேலும் எம்பாப்பே மற்றும் எர்லிங் ஹோலண்ட் ஆகியோரும் இந்த பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இதில் போர்த்துக்கல் ஜாம்பவான் மற்றும் எல்லா காலத்திலும் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ பெயர் பரிந்துரை பட்டியலில் இடம் பெறவில்லை.

5 முறை இந்த விருதை பெற்றுள்ள அவர் பெயர் இடம் பெறாதது அவரின்ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ஐ)

## ஐ. பி. எல். தொடருக்கு மீண்டும் வரும் ஸ்டார்க்



சென்னை, செப். 08

9 ஆண்டுகளுக்கு பின்னர் ஐ. பி. எல். தொடரில் ஆடவுள்ளார் அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க்.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் 8 அணிகள் மட்டுமே விளையாடிய நிலையில் ஒவ்வொரு ஆண்டும் பல மாறுதல்கள் நடந்து தற்போது 10 அணிகள் ஐபிஎல் போட்டிகளில் விளையாடி வருகின்றன. இதுவரை ஐபிஎல் கோப்பையை மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 முறை கைப்பற்றி உள்ளது.

இவர்களுக்கு அடுத்தப்படியாக ஹைதராபாத், கொல்கத்தா 2 முறையும், ராஜஸ்தான், குஜராத் 1 முறையும் கைப்பற்றியுள்ளது. இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் மீண்டும் ஐ. பி. எல். தொடரில் விளையாட உள்ளதாக தெரிவித்துள்ளார். ஐ. பி. எல். மினி ஏலப்பட்டியலில் ஸ்டார்க் பெயர் இடம்பெறும் பட்சத்தில் அவரை ஏலத்தில் எடுக்க அனைத்து அணிகளிடையே கடும் போட்டி நிலவும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. இவரை சென்னை, மும்பை, பெங்களூர் ஆகிய 3 அணிகள் ஏலத்தில் எடுக்க அதிக வாய்ப்பு உள்ளது. இவர் 9 ஆண்டு இடைவெளிக்கு பிறகு மீண்டும் ஐபிஎல் தொடரில் விளையாட உள்ளார்.

# இங்கிலாந்துக்கு எதிரான தொடரை வென்று இலங்கை மகளிர் சாதனை!

லண்டன், செப். 08

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. அங்கு 3 போட்டிகள் கொண்ட இருபது 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

இதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் இருபது -20 தொடர் நடைபெற்றது. இதில் நடந்த முதல் 2 போட்டிகளில் இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகள் வெற்றி பெற்று தொடரில் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தன.



இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையேயான 3ஆவது மற்றும் கடைசி டி20 போட்டி நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி கேப்டன் சமாரி அத்தபத்து முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து வீராங்கனைகள் இலங்கை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதனால் இங்கிலாந்து அணி 19 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இலங்கை அணி தரப்பில் அணித் தலைவி சமாரி அத்தபத்து 3 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

பின்னர் 117 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இலங்கை அணியினர் 17 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 117 ஓட்டங்கள் அடித்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட இருபது 20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. மகளிர் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து அணிக்கு எதிராக இலங்கை அணி தொடரை வெல்வது இதுவே முதல் முறையாகும்.

இந்த தொடர் முழுவதும் சிறப்பாக செயல்பட்ட இலங்கை அணி கேப்டன் அத்தபத்து இந்த போட்டியில் ஆட்டநாயகி விருது மற்றும் தொடர்நாயகி விருதை வென்று அசத்தியுள்ளார். அடுத்ததாக இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது.

(ஐ)

# ரஷ்யாவின் பகுதியை உரிமை கோரும் சீனா: நட்பு நாடுகளுக்கு இடையே விரிசல் ஏற்படுகிறதா?



கடந்த வாரம் சீனா தனது புதிய வரைபடத்தை வெளியிட்டபோது, இந்தியா, மலேசியா, இந்தோனீசியா, பிலிப்பைன்ஸ், நேபாளம் மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் கடும் ஆட்சேபனை தெரிவித்த போதிலும், ரஷ்யா அமைதியாக இருந்தது.

புதிய வரைபடத்தில், இந்தியாவின் அருணாச்சல பிரதேசம் மற்றும் அக்சாய் சின் ஆகியவற்றை சீனா தனது பகுதியாகக் காட்டியிருந்தது, அதே நேரத்தில் தென் சீனக் கடலில் உள்ள மலேசியா, இந்தோனீசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்வான் ஆகிய கடல் பகுதிகள் மற்றும் தீவுகளை சீனா தனது சொந்த பகுதியாக அறிவித்திருந்தது.

அதேபோல் சீனா தனது புதிய வரைபடத்தில், ரஷ்யாவின் வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய போல்ஷோய் உசுரிஸ்கி தீவையும் சேர்த்துக் கொண்டுள்ளது. இந்தத் தீவு தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்கனவே ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

இந்த தீவில் ரஷ்யாவிற்கும் பங்கு உள்ளது ஆனால் சீனா தனது புதிய வரைபடத்தில் முழு தீவையும் தனக்கு சொந்தமானதாக அறிவித்துள்ளது.

இது நடந்து சில நாட்கள் அமைதிக்குப் பிறகு, சர்ச்சைக்குரிய தீவில் சீனா உரிமை கோருவது தொடர்பாக ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகம் சமீபத்தில் தனது மௌனத்தைக் கலைத்திருக்கிறது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா, போல்ஷோய் உசுரிஸ்கி தீவின் மீதான சீனாவின் உரிமைகோரலை நிராகரித்திருக்கிறார். தீவின் உரிமை குறித்த பிரச்சினை இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் 15 ஆண்டுகளுக்கு முன்பு தீர்க்கப்பட்டது என்று கூறியிருக்கிறார்.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு அறிக்கையில், ஜகரோவா, “எங்களுக்கு இடையேயான இந்த எல்லைப் பிரச்சனை தீர்க்கப்பட்டுவிட்டது என்ற நிலைப்பாட்டில் இரு நாடுகளும் நிற்கின்றன. 2005-ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி போல்ஷோய் உசுரிஸ்கி தீவு இரு நாடுகளுக்கும் இடையே பிரிக்கப்பட்டது,’ என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் சீனா வெளியிட்டிருக்கும் புதிய வரைபடத்தில், இந்த 135 சதுர மைல் தீவுக்கு முழு உரிமை கோரியுள்ளது.

பல வருட கடின உழைப்பிற்குப் பிறகு இரு நாடுகளும் எல்லைப் பிரச்சனையைத் தீர்த்துக்கொண்டதாகவும், இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற்றுள்ளதாகவும் ஜகரோவா கூறுகிறார்.

இதன் மூலம் பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை வலுப்பெற்றுள்ளதாகவும், எல்லைப் பிரச்னைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதற்கு உலக நாடுகள் அனைத்திற்கும் இது ஒரு எடுத்துக்காட்டு என்றும் அவர் கூறினார்.

இந்தியாவின் முன்னாள் வெளியுறவு செயலாளர் கன்வால் சிபல் பதிவிட்டிருக்கும் ஒரு ட்வீட்டில், இது ஒரு சிறிய தவறு அல்ல என்றிருக்கிறார். ‘ஏனெனில் சீனாவின் இந்த வரைபடம் அதன் இறையாண்மை உரிமைகளை புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்துகிறது” என்கிறார் அவர்.

மேலும் அவர், “ரஷ்யாவுடனான இந்தத் தவற்றைச் சரிசெய்ய சீனா புதிய வரைபடத்தை வெளியிடுமா? தனது தவறை அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுமா?” என்று கேட்டிருக்கிறார்.

எதிர்ப்பையும் மீறி இதுபோன்ற உரிமைகோரல்களுடன் புதிய வரைபடத்தை வெளியிடுவது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவைக் கெடுக்கும் என்று சிபல் கூறியிருக்கிறார்.

இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் டெனிஸ் எலிபோவ் சீனாவின் புதிய வரைபடத்திற்கு பதிலளித்துள்ளார். பத்திரிக்கையாளர் சித்தாந்த் சிபல் தனது எதிர்வினையை ஓ-இல் (முன்னதாக ட்விட்டர்) பதிவிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த டெனிஸ், இந்தியாவைப் போல ரஷ்யா இதைப் பெரிய பிரச்னையாகக் கருதவில்லை என்றும், கள நிலவரத்தில் எந்த மாற்றமும் இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

1969-ஆம் ஆண்டில், அமுர் மற்றும் உசுரி நதிகளின் கரையில் சோவியத் யூனியனுக்கும் சீனாவிற்கும் இடையே ஒரு போர் நடந்தது.

அந்தப்போரில், சோவியத் ஒன்றியம் சீனாவை அணு ஆயுத தாக்குதலால் அச்சுறுத்தியது.

இதில் சீனா பின்வாங்க வேண்டியதாயிற்று. 2004-ஆம் அண்டு, இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. மத்திய ஆசியாவின் பல தீவுகள் ரஷ்யாவால் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டன.



### இந்த சர்ச்சையின் வரலாறு என்ன?

சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான பகைமைக்கு முக்கிய காரணமாக போல்ஷோய் உசுரிஸ்கி தீவு இருந்து வருகிறது.

நான்கு தசாப்தங்கள் நீடித்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு, 2004-ஆம் ஆண்டு இவ்விவகாரத்தில் இரு நாடுகளும் ஒரு உடன்பாட்டை எட்டின.

‘நியூஸ் வீக்’ பத்திரிகை வெளியிட்ட ஒரு அறிக்கையில், இந்த ஒப்பந்தத்தின்படி, ரஷ்யா தாராபரோவ் மற்றும் போல்ஷாய் உசுரிஸ்கியின் சில பகுதிகளைச் சீனாவிடம் ஒப்படைத்தது. அதன் பிறகு எதிர்காலத்தில் ரஷ்யாவின் வேறு நிலப்பரப்புகளை கோர மாட்டோம் என சீனா ஒப்புக்கொண்டது.

2005-ஆம் ஆண்டில், விளாதிமிர் புடின் இந்த ஒப்பந்தத்தை பாராட்டினார், அதன் பிறகு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் செயல்முறை தொடங்கியது.



போல்ஷோய் உசுரிஸ்கி தீவு, உசுரி மற்றும் அமுர் நதிகளின் சங்கமத்தில் அமைந்துள்ளது. அதனால்தான் ரஷ்யாவும் சீனாவும் இந்தத் தீவை தங்களது என்று கோருகின்றன.

2008-ஆம் ஆண்டில் எல்லை முடிவு செய்யப்பட்டது. இதில் இரு நாடுகளும் தீவை தோராயமாக பாதியாகப் பிரித்துக்கொண்டன. தீவின் 350 சதுர கிலோமீட்டரில், 170 சதுர கிலோமீட்டரை ரஷ்யா சீனாவிடம் ஒப்படைத்தது.

உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்குப் பிறகு, மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பெரிய அளவிலான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதையும் மீறி, சீனா ரஷ்யாவுக்கு ஆதரவளித்து வருகிறது.

பொருளாதாரத் தடைகளுக்குப் பிறகு, ரஷ்யா பொருளாதார உறவுகளின் அடிப்படையில் முன்பை விட சீனாவை அதிகம் சார்ந்துள்ளது. 2023-ஆம் ஆண்டு மார்ச் மாதம், சீன அதிபர் ஷி ஜின்பிங் ரஷ்யாவுக்குச் சென்றார். அங்கு அவர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு புதிய சகாப்தத்தை அறிவித்தார்.

அவர் ரஷ்ய அதிபர் புடினை ‘தெளிவான பேச்சாளர் மற்றும் திறந்த இதயம் கொண்ட நண்பர்’ என்று விவரித்தார். இருதரப்பு வர்த்தகம், எரிசக்தி மற்றும் அரசியல் உறவுகள் குறித்தும் இரு தலைவர்களும் பேசினர்.

புதின் சீனாவை ‘ரஷ்யாவின் மிக முக்கியமான வர்த்தக பங்குதாரர்’ என்று விவரித்தார் மற்றும் சீனாவுடனான வர்த்தகத்தை அதிகரிக்க உறுதியளித்தார்.

ரஷ்ய எரிவாயுவை மங்கோலியா வழியாக சீனாவிற்கு கொண்டு செல்ல, சைபீரியாவில் குழாய் அமைக்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டதாக ரஷ்ய அரசு ஊடகம் தெரிவித்திருந்தது.

இதுமட்டுமின்றி, புதிய யுருமுருளு ஒப்பந்தம் குறித்து இரு தலைவர்களும் தங்கள் கவலைகளை தெரிவித்தனர். இந்த ஒப்பந்தம் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா இடையேயான பாதுகாப்பு ஒப்பந்தமாகும்.

நேட்டோவின் இருப்பு ஆசியாவில் அதிகரித்து வருவது காரணமாக இராணுவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் இரு தலைவர்கள் கவலை தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், வரைபடத்தில் எழுந்துள்ள சர்ச்சையானது இரு நாடுகளுக்கும் இடையில் புதிய இராஜதந்திர நெருக்கடியை உருவாக்கியுள்ளதா என்பது மிகப்பெரிய கேள்வியாக உள்ளது. இந்தக் கடினமான நேரத்தில் ரஷ்யா தனது நண்பரான சீனாவுடன் இந்த சிக்கலை எவ்வாறு தீர்க்கும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.



### ரஷ்யாவின் மீது ஷி ஜின்பிங் வைத்திருக்கும் மதிப்பு

ரஷ்யா மீதான சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் நாட்டம் அவரது குடும்பம் மற்றும் வளர்ப்பு சார்ந்தது. ஷி ஜின்பிங்கின் வாழ்க்கை தொடர்பாக றுளுது பத்திரிகை இவ்வாறு எழுதியுள்ளது: ‘1953-இல் ஷி ஜின்பிங் பிறந்த போது, அதே ஆண்டில், மாவோ சே துங் சோவியத் யூனியனை சீனாவின் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ அமைப்புக்கு ஒரு முன்மாதிரியாகக் கருதி அதை ஆய்வு செய்தார்.”

ஷி ஜின்பிங்கின் தந்தை ஷி சோங்ஷூன் ஒரு புரட்சியாளர், மாவோவின் புரட்சியுடன் தொடர்புடையவர். 1950-களின் பிற்பகுதியில், ஷி சோங்ஷூன் கனரக தொழில்துறையைப் படிக்க சோவியத் ஒன்றியத்துக்குச் சென்றார். சோவியத் ஒன்றியத்தைப் பற்றி ஆய்வு செய்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் மாவோ தொடங்கிய பிரச்சாரம் இளம் ஷி ஜின்பிங்கின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.”

வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, சோவியத்தின் விழுமியங்கள், வரலாறு மற்றும் கலாச்சாரம் ஜின்பிங்கின் மனதில் ஆழமாக இடம்பிடித்துள்ளன.

1991-இல் சோவியத் ஒன்றியம் உடைந்து ரஷ்யா உருவானபோதும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் மேம்பட்டன. இருவரும் அமெரிக்காவை போட்டியாக பார்க்க ஆரம்பித்தனர்.


ஷி ஜின்பிங் அதிபராக பதவியேற்ற பிறகு, 2013-ம் ஆண்டு ரஷ்யாவுக்கு தனது முதல் வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் போது, ரஷ்யாவுடனான சீனாவின் சிறப்பு உறவுகளை குறிப்பிட்ட ஷி ஜின்பிங், தனது ஆளுமை புடினைப் போன்றது என்றும் கூறியிருந்தார். அன்று முதல் இரு தலைவர்களும் ஒருவர் மற்றவருடைய பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

ஆட்சிக்கு வந்த பிறகு, ஷி ஜின்பிங் சீனாவின் தலைமையின் கட்டமைப்பையும் தனக்கேற்ப மாற்றினார். தலைமைத்துவத்தின் அடிப்படையில் அவர் புடின் மாதிரியை ஏற்றுக்கொண்டார் என்று கூறப்படுகிறது. இதன் கீழ், அவர் சக்திவாய்ந்த பொலிட்பீரோவை பலவீனப்படுத்தி, தன்னை மேலும் சக்திவாய்ந்தவராக ஆக்கிக்கொண்டார்.

2014-ஆம் ஆண்டு கிரைமியாவை உக்ரேனிலிருந்து பிரித்து, ரஷ்யா தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததில் இருந்து இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார உறவுகள் ஆழமடைந்துள்ளன. அப்போதும் ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளை சீனா எதிர்த்தது.

இம்முறையும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் எத்தனை முறை தீர்மானங்களை முன் வைத்தபோதும் சீனா அவற்றை ஆதரிக்கவில்லை. ●

# சனல்-4: ஈஸ்டர் குண்டுவெடிப்பு ராஜபக்ஸ ஆட்சிக்கு வர செய்த சதியா?



இலங்கையில் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 4 வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தது.

இந்த வீடியோவில் ஈஸ்டர் தாக்குதலுடன் ராஜபக்ஸ குடும்பம் உள்ளிட்ட சிலருக்கு தொடர்பு இருப்பதாக தெரிவித்தே இந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளது. கோத்தபய ராஜபக்ஸ வெற்றி பெறுவதற்காக புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து இதற்கான சதித் திட்டம் தீட்டப்பட்டடதாக சனல்-4 ஆவணப்படம் கூறுகிறது.

### சனல்-4 ஆவணப்படம் - சாட்சிகள் யார்?

ராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய அசாத் மௌலானா இந்த வீடியோவின் பிரதான சாட்சியாளராக விளங்குகின்றார். அசாத் மௌலானா தற்போது சுவிட்ஸர்லாந்தில் அரசியல் புகலிடம் கோரியுள்ளதாக தெரிய வருகின்றது.

அத்துடன், வெள்ளை வான் விவகாரத்தில் நாட்டிலிருந்து வெளியேறிய குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பிரதானியான நிஷாந்த சில்வா கந்தப்பா, ஊடகவியலாளராக பேட்ரிகா ஜென்ஸ், கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் சகோதரன் லால் விக்ரமதுங்க, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், முன்னாள் ராஜதந்திர அதிகாரி சரத் கொன்காகே, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை ஆகியோர் இந்த வீடியோவில் சாட்சி வழங்கியுள்ளனர்.

ராஜபக்ஸ குடும்பத்தை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர நாட்டிற்குள் பாதுகாப்பற்ற நிலையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற விதத்தில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாக இந்த வீடியோவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் ராணுவ புலனாய்வு பிரிவின் பிரதானியான மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவிற்கும், தௌஹித் ஜமாத் அமைப்பிற்கும் இடையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விவகாரம் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அசாத் மௌலானா அந்த வீடியோவில் கூறியுள்ளார்.

அத்துடன், ராஜபக்ஸ குடும்பத்தின் குற்றங்கள் என அடையாளப்படுத்தி மேலும் சில தகவல்களையும் சனல் 4 வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் ஊடகவியலாளர் பேட்ரிகா ஜென்ஸ் மற்றும் லசந்த விக்ரமதுங்கவின் சகோதரன் லால் விக்ரமதுங்க ஆகியோர் இந்த வீடியோவில் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மறுப்பு

இந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் ராணுவ புலனாய்வு பிரிவின் பிரதானியான மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவிடம், சனல் 4 ஆவணப் படம் எழுத்து மூலம் கேள்விகளை எழுப்பியுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் முன்னாள் ராணுவ புலனாய்வு பிரிவின் பிரதானியான மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே நிராகரித்துள்ளதாக சனல் 4 ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜபக்ஸ குடும்பத்தை ஆட்சிக்கு கொண்டு வர நாட்டில் பாதுகாப்பற்ற நிலைமையொன்றை ஏற்படுத்த வேண்டும் என ராஜபக்ஸ குடும்பம் எண்ணியதா எனவும், தௌஹித் ஜமாத் அமைப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதா எனவும் சனல் 4, முன்னாள் ராணுவ புலனாய்வு பிரிவின் பிரதானியான மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவிடம் வினவியுள்ளது.

இந்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்துள்ளார்.

தௌஹித் ஜமாத் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக கூறப்படும் காலப் பகுதியில் தான் மலேசியாவில் தூதரகத்தில் பணியாற்றிக்ொகண்டிருந்ததாகவும் அங்கே தான் இருந்ததை மலேசிய அதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.









அத்துடன், ஈஸ்டர் குண்டுவெடிப்பு நடத்தப்படும் தருணத்தில் தான் இந்தியாவில் இருந்ததாகவும் அவர் சனல் 4 தொலைக்காட்சிக்கு பதிலளித்துள்ளார்.

### அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மறுப்பு

இந்த ஆவணப் படத்தில் தன் மீது சுமத்தப்படும் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்பதாக ராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தன்னுடன் இருந்த அசாத் மௌலானா போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார். இந்த தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான பொறுப்பை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார். எனினும், அசாத் மௌலானா இந்த சம்பவத்தை வேறு திசையை நோக்கி நகர்த்த முயற்சித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தாக்குதலுக்கு பின்னணியில் காணப்படும் சர்வதேச சக்திகளை அசாத் மௌலானா காப்பாற்ற முயற்சிக்கின்றாரா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். தான் சிறைச்சாலையில் இருந்ததாகவும், குறுகிய காலத்தில் தற்கொலை குண்டுதாரியை தயார்படுத்த முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்புகின்றார்.

குறுகிய காலத்தில் இவ்வாறான ஒன்றை தயார்படுத்த முடியாது. எதிர்கட்சித் தலைவர் கூறுகின்ற விதத்தில் இந்த சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டும். அதேபோன்று அசாத் மௌலானா தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

உள்நாட்டு விசாரணை தோல்வியடைந்துள்ள தருணத்தில், சர்வதேச விசாரணைகளில் மாத்திரமே உண்மையை கண்டறிய முடியும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கின்றார். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

இந்த விடயத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் அரசாங்கத்திற்கு, இதற்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த விடயத்தை மூடி மறைக்காது, உள்நாட்டு மற்றும் சர்வதேசங்களை இணைத்ததாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் இந்த அரசாங்கத்திற்கு தொடர்புள்ளதா என கண்டறியப்பட வேண்டும் எனவும் எதிர்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

### நாமல் ராஜபக்ஸ கருத்து

'சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி தொடங்கிய பிறகு, ஈஸ்டர் தாக்குதலுக்கு ஓராண்டுக்கு முன்பாக நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் 70 சதவீதத்திற்கும் அதிகமான இடங்களை வென்றோம். ஆகவே, தேர்தல் வெற்றிக்காக இதுபோன்ற வேலைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை" என அவர் கூறினார்.

### விசாரணைக் குழு - இலங்கை அரசு அறிவிப்பு

ஈஸ்டர் தாக்குதல் குறித்து சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய ஆவணப்படத்தில் இடம் பெற்ற அம்சங்கள் தொடர்பாக விசாரிக்க ஒரு குழு அமைக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் அந்நாட்டு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

'சனல்-4 குழுவினர் இலங்கை வந்து ஆதாரங்களை தர முடியாவிட்டாலும், அங்கிருந்த படியே ஜூம் மூலமாக ஆதாரங்களை அளிக்கலாம்" என்று அவர் கூறியுள்ளார்.

### சேனல் 4 ஆவணப்படம் - கொழும்பு பேராயர் கருத்து

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சனல்-4 ஆவணப்படம் குறிப்பிடும் விஷயங்களை விசாரணைக்குப் பிறகே ஏற்போம் என்று கொழும்பு பேராயர் மால்கம் கார்டினல் ரஞ்சித் தெரிவித்துள்ளார். எந்தவொரு விசாரணையும் இல்லாமல் அந்த ஆவணப்படத்தை அப்படியே ஏற்க முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

சனல்-4 ஆவணப்படத்தை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், "ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முறையான, வெளிப்படையான விசாரணை நடப்பதை உறுதி செய்ய நாட்டு மக்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடையும் போது, சனல்-4 போன்ற சர்வதேச ஊடகங்களின் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட முயற்சி சிறப்பானது. சில உண்மைகளை கண்டுபிடிக்க வேண்டியிருப்பதாக அது கூறியுள்ளது" என்று கூறினார்.

மேலும் தொடர்ந்த அவர், 'சனல்-4 ஆவணப்படம் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான விஷயங்கள் தொடர்பாக நேர்மையான, வெளிப்படையான முழுமையான விசாரணையைத் தொடங்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே விசாரித்த குழுக்கள் கண்டுபிடித்த விவரங்கள் மீது முறையான விசாரணை நடத்தப்படவில்லை. தற்போதைய அரசும் சரி, முந்தைய அரசும் சரி, நாடாளுமன்றம் நியமித்த குழு அளித்த பரிந்துரைகள் மீது அலட்சியமே காட்டியுள்ளன. சனல்-4 ஆவணப்படத்தில் உள்ள விவரங்கள் தன்னிச்சையான சர்வதேச குழு மூலம் விசாரணையில் தெரியவந்தவை.

குற்றவியல் புலனாய்வுத் துறையில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட விசாரணை அதிகாரிகள் மீண்டும் உள்நாட்டுக் குழுவில் இடம் பெறவேண்டும். அந்தக் குழு சர்வதேச புலனாய்வுக் குழுவுக்கு உதவியாக இருக்க வேண்டும்." என்று அவர் கூறினார்.

# உடற்பயிற்சி செய்தவர் யானை தாக்கி மரணம்

கொழும்பு, செப். 08

பொலனறுவை - தியபெதும பகுதியில் வீதியோரம் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் காட்டுயானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

சம்பவத்தில் 45 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார்.

குறித்த நபர் முன்னாள் இராணுவ உத்தியோகத்தர் என தெரிவிக்கப் படுகிறது.



சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# ‘நான் அப்போது நீதிமன்றமும்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தாக்குதல் நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு. ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதச் செயல்களுக்கு பெருமை சேர்த்தது, கொலைகளுக்கு “இஸ்லாமிய அரசு போராளிகள்” காரணம் என்று கூறியது.

லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் டிசெம்பர் 11, 2020 அன்று எவ்.பி.ஐயினால் தாக்கல் செய்யப்பட்ட கிரிமினல் வழக்கு ஏறக்குறைய இரண்டு வருட விசாரணையின் விளைவாகும். மேற்கத்தியர்கள் அடிக்கடி வரும் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் சொகுசு ஹோட்டல்களை குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து இலங்கை அதிகாரிகளுக்கு இது உதவியது.“ என குறிப்பிடப்பட்டுள்ளது.

சனல் 4 இன் இந்த சமீபத்திய திரைப் படம் பெரும்பாலும் 2005 முதல் ராஜபக்ஷ மரபை கருமையாக்கும் நோக்கில் ராஜபக்ஷவுக்கு எதிரான ஒரு துவேஷம் மற்றும் அதே சனலால் ஒளிபரப்பப்பட்ட முந்தைய படங்களைப் போலவே பொய்களின் திணிவு ஆகும். என்னை ஜனாதிபதியாக்குவதற்காக இஸ்லாமிய தீவிரவாதிகள் குழு தற்கொலை தாக்குதல் நடத்தியதாக கூறுவது அபத்தமானது. அரசியல் உள்நோக்கம் கொண்ட சில தனிநபர்கள் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும், நான் அரசாங்கப் பதவியில் இருந்தபோது ரோமன் கத்தோலிக்க சமூகத்திற்கு தனிப்பட்ட முறையில் என்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளேன். யுத்தம் முடிவடைந்த பின்னர், முள்ளிக்குளத்திலுள்ள மடு தேவாலயம் மற்றும் தேவாலயத்தின் மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்புக்கு நான் உதவினேன். பரிசுத்த பாப்பரசரை இலங்கைக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளுக்கு நான் உதவியதோடு, விஜயத்தை ஏற்பாடு செய்வதற்காக அப்போதைய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட குழுவிற்கும் நான் தலைமை தாங்கினேன். பொலவலனையில் உயர்கல்விக்கான பதினாறாம் பெனடிக்ட் கத்தோலிக்க நிறுவனத்தை நிர்மாணிப்பதிலும் நான் முக்கிய பங்காற்றினேன். அந்த காலகட்டத்தில் கர்தினால் அவர்களுடன் நான் மிக நெருக்கமாக பணியாற்றினேன்- எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மட்டக்களப்பு வின்சன்ட் கல்லூரியிலிருந்து அதிகளவு மாணவிகள் பல்கலைக்கு தெரிவு

மட்டக்களப்பு, செப். 08

இம்முறை இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் பல்கலைக்கழகம் தெரிவாகி சாதனை படைத்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் கடந்த 04ஆம் திகதி வெளியான நிலையில் வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் மாவட்ட ரீதியில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் ஆறாவது இடத்தையும் வணிகப் பிரிவில் ஐந்து மற்றும் ஆறாவது இடத்தையும் கணிதப்பிரிவில் பத்தாவது இடத்தையும், கலைப்பிரிவில் நான்காவது ஐந்தாவது மற்றும் ஒன்பதாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் இப்பாடசாலையிலிருந்து மருத்துவத் துறைக்கு 9 மாணவிகளும், பொறியியல் துறைக்கு 9 மாணவிகளும், வர்த்தகத் துறையில் 13 மாணவிகளும், கலைத்துறையில் சட்டத் துறைக்கு 4 மாணவிகள் உட்பட 18 மாணவிகளும் பல்களைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். இதுதவிர ஏனைய துறைகளுக்காக 52 மாணவிகள் பல்கலைக்கழகம் செல்ல தெரிவாகி சாதனை படைத்துள்ளனர். கடந்த இரண்டு வருடங்களில் இப்பாடசாலையின் க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை சீர் செய்யும் நோக்கில் பாடசாலை அதிபர் திருமதி. ரீ. உதயகுமாரின் வழிகாட்டலில் பாடசாலை சமுகம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன எடுத்துக் கொண்ட விசேட வேலைத்திட்டம் காரணமாகவே இந்த அடைவை பெற்றப்பட்டதாக உதவி அதிபர் எம். பாலகிருஷ்னன் வின்சன்ட் பாடசாலையில் இடம்பெற்ற பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் தெரிவித்தார். (அ)

# முன்னறிவித்தல் இன்றி வெளியேறும் வைத்தியர்கள் மீது கடும் நடவடிக்கை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, செப். 08

எவ்வித முன்னறிவிப்புகளும் இன்றி மருத்துவமனைகளில் இருந்து வெளியேறும் வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனை கூறினார்.

எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பணிக்கு சமுகமளிக்காத காரணத்தினால் குறித்த வைத்தியசாலையில் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

